நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை, தோற்றம் 14.09.1901

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி: 110 பகுதி: 05 மே-2016

திருவள்ளுவர் ஆண்டு 2047

விலை: ரூ.10



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911



மன்னர் பாஸ்கர சேதுபதி

1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A., | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | உறுப்பினர் |
| திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. க.சி.அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. பெ.சந்திரசேகரன் | உறுப்பினர் |

## செந்தமிழ்க் கல்லூரிக்குழு

| | |
|---|---|
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. ச.தசரதராமன் B.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. து.மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.ஜெகனாதன் B.E., | உறுப்பினர் |
| திரு. லெ.சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc., | உறுப்பினர் |
| திரு. கி.ராஜாராம் M.B.A., | உறுப்பினர் |
| முனைவர் க.பாலகிருஷ்ணன் | பல்கலைக்கழக நியமன உறுப்பினர் |
| முனைவர் சு.விஜயன் | உறுப்பினர் |
| முனைவர் கி.வேணுகா | உறுப்பினர் |

# பொருளடக்கம்


1. இதழ் மணம் 4

2. தமிழியல் ஆய்வு வரலாறு - மதிப்புரை 6
பேராசிரியர் இரா.சதாசிவம்

3. புல் 8
இரா.இளங்குமரன்

2. "பாரதியாரின் பாஞ்சாலி சபதம்"
முனைவர் சு.முத்துஇலக்குமி நூலாய்வு -தந்துரை 14
பேராசிரியர் முனைவர் இ.கி.இராமசாமி

3. கட்டளைக்கல் 20
பேராசிரியர் கசுத்தூரி இராமசாமி

4. அறியத்தோன்றும் அகரக் கிளவி 18
முனைவர் மு.கற்பகம்

5. சங்க இலக்கியத்தில் 'வான்மழை' மரபும் மாற்றமும் 24
முனைவர் உ.கருப்பத்தேவன்

8. தமிழர் பண்பாட்டில் புழங்குபொருட்கள் 40
முனைவர் பா.நேருஜி

# இதழ் மணம்

பேராசான், பெருஞ்சொல்வித்தகர், அறிஞர் இரா.இளங்குமரனார் "புல்" என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையின் இரண்டாம் பகுதி இவ்விதழில் இடம்பெறுகிறது. புல் என்பது பனை ஓலையால் ஆகிய பெட்டி, முறம் போன்றவற்றை பிரிந்து துளைபடுதல் பொல்லம் எனப்பட்டது. பனை ஓலையால் ஆகிய ஏடுகளைத் தொலையிட்டுச் சுவடி தயாரிக்கும் பழக்கம் புத்தகம் என்னும் வழக்கில் வந்தது. புத்தகம் என்பது பழைய சொல் வழக்கு என்பதை அறிவுறுத்தும் பாங்கும் அது இன்று "புக்" என நம்மவர் அழைப்பதை ஆசிரியர் நகைச்சுவையோடு எழுதுவது கற்பவர்க்கு இன்பம் பயப்பதாகும். பலர் நகைச்சுவையை வலிந்து கொண்டுவருவர். ஆசிரியர் இயல்பாக நம்மவர் அறியாமையை எளிதின் உணர்த்தி உண்மை காணச்செய்வது அறிவினால் பெரும் இன்பமாகும். இன்பத்தைச் சொல்லும் திருவள்ளுவரும் "அறிதோறும் அறியாமை கண்டற்றால்" என இன்பம் அறிவின்பாற்பட்டது என்னும் நயம் தோன்றக்கூறும் நெறி இளங்குமரனார் நடைக்கும் பொருந்தும்.

இளங்குமரனாரின் கல்வி என்பது புத்தகப் படிப்பு மட்டும் அன்று, அது வாழ்நாள் கல்வி. அவர் இவ்வுலகத்தையும் உலகத்து இயற்கைச் செல்வத்தையும் உயிரிகளையும் தம் உயிர் போல் நேசிப்பவர். வாழ்நாள் முழுவதும் பார்க்கும் கண்ணும் கேட்கும் செவியும் பிற புலன்களும் இயற்கையோடு ஒன்றி நின்று கற்கும் இயல்பின. அதனால் அவர்தம் கல்வி அன்பின் வயப்பட்டது. இயற்கையோடு பொருந்தியது. யாதானும் நாடாமல் ஊராமால் எனவும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் இயற்கையில் பயிலியது கெழீய நட்பின்பால் பட்ட அன்பு நலம் சான்ற மெய்ப்பொருட் கல்வி இயற்கையும், உலகமும் அவர்க்கு வேறு அல்ல, அவற்றோடு ஒன்றிய வாழ்வினர். சொல்லின் நயம் உணர்ந்து கற்பவர்க்குத் தேனாய் இன்னமுதாய்த் தித்திக்கும் செந்தமிழ் இன்பத் தேன், மனத்தையும் மூளையின் உயிரணுக்களையும் கிளர்ச்சி அடையச் செய்து புத்துயிர் அளிப்பதாகும். "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" என்பதனால் கல்வியாளர்கள் இது போன்ற கட்டுரைகளைத் தேடிப்பயில்தல் வேண்டும். இளங்குமரனாருடைய கட்டுரையை வெளியிடுவதில் செந்தமிழ் இதழ் பெருமைப்படுகிறது.

பேராசிரியர் இ.கி.இராமசாமி, முனைவர் சு.முத்துலட்சுமி எழுதிய பாரதியாரின் பாஞ்சாலி சபதம் குறித்த ஆய்வு நூலைத் திறனாய்வு

செய்துள்ளார். பேராசிரியர் முத்துலட்சுமி கற்றல் கேட்டல் என்பது வாழ்நாள் முயற்சியாக மேற்கொண்டு வாழ்பவர். அவர்களைக் குறித்துப் பேராசிரியர் இ.கி.இராமசாமி எழுதியிருக்கும் செய்திகள் நன்மொழிகளே. நூல் திறனாய்வும் நடுநிலையோடு திறனாய்வு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

அடுத்துப் பேராசிரியர் கசுத்தூரி இராமசாமி அவர்கள் அறிவியல் துறை சார்ந்த கல்வியாளர் அவர்தம் கணவரோடு சேர்ந்து தமிழ் இலக்கியத்தில் தோய்ந்துள்ள தகைமை அவருடைய கட்டுரையின் வெளிப்பாடு. இலக்கியத்தையும் அறிவியலையும் இணைத்துக் காட்டியிருக்கும் நுட்பம் இன்புறத்தக்கதாகும். இடையே கட்டளைக்கல் அழிந்துவிடுமே என்ற கவலையையும் வெளியிட்டிருக்கிறார். அமெரிக்காவில் எடிசன் மின் விளக்கைக் கண்டுபிடித்தபோது பல லட்சம் இரும்புத்தொழில் செய்யும் கொல்லர்கள் அரிக்கன் விளக்குப் பயன்பாடு ஒழிந்ததால் வேலை இழக்க நேரிட்டதை பொருளாதாராத்தில் புதிய படைப்பும் பழையன பயனற்றுப் போவதும் பொருள் உலகின் நியதி என்பர்.

“அறியத் தோன்றும் அகரக்கிளவி” என்னும் தலைப்பில் தியாகராசர் கல்லூரிப் பேராசிரியை முனைவர் மு.கற்பகம் எழுதிய இலக்கணக் கட்டுரை இடம்பெறுகிறது. தொல்காப்பியத்தில் 227 முதல் 232 வரை உள்ள நூற்பாக்கள் முறை மாறியிருப்பதாக ஆசிரியர் கூறியுள்ள கூற்று மேலும் ஆராய்வதற்குரியதாகும்.

சங்க இலக்கியத்தில் “வான் மழை” என்னும் தலைப்பில் முனைவர் உ.கருப்பத்தேவன் மழை குறித்த குறிப்புக்கள் வரும் இடங்களை வகை தொகைப்படுத்தி எழுதியுள்ளார்.

# தமிழியல் ஆய்வு வரலாறு

**கபிலன் பதிப்பகம்**
53, ஏடிஎஸ் நகர், காந்தி கிராமம்,
திண்டுக்கல், தமிழ்நாடு.
விலை: ரூ.210

பேராசிரியர் **அ.பிச்சை**
கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

## *மதிப்புரை: பேரா.இரா.சதாசிவம்*

தமிழ் மக்கள் ஆய்வு நெறி நின்று உண்மை காணும் இயல்பினர் என்பது தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்கள் வாயிலாக அறியப்படும் உண்மை. தொல்காப்பியமும் திருக்குறளும் போற்றிக் கற்கப்படாத கால இடைவெளி ஒன்று இடைக்காலத்தில் இருந்தது.

புராணம், இதிகாசங்கள், தலபுராணங்கள், வழிபாட்டு நூல்கள் இந்த இடைக்காலத்தில் தன் செல்வாக்கைச் சமுதாயத்திலும் கற்பவர் மத்தியிலும் சிந்தனை அளவில் பெரும் பாதிப்பையும் அதன்வழி சமுதாயத்தில் தாழ்வு மனப்பான்மையையும் எதனையும் ஆராய்ச்சி இன்றி ஏற்றுக் கொள்ளும் சரணாகதிப் போக்கையும் வற்புறுத்தியிருக்கின்றன. அதன் விளைவாகத் தமிழ்ச் சமூகம் வழிவழிவந்த கருத்துக்களையும் நடைமுறைகளையும் மறுசிந்தனைக்கு உட்படுத்தத் தவறியிருக்கிறது. கல்வியாளர் மத்தியிலும் சமுதாயச் சீர்திருத்தங்களை விடுத்துச் சடங்கு சம்பிரதாயங்களுக்கு உரம் இடும் வகையில் தங்களுடைய பேச்சிலும் எழுத்திலும் பழைய வழக்கங்களைப் பெரிதெனப் பேசும் சமயச் சார்பான நடைமுறைகளை ஆராய்ச்சி இன்றி ஏற்றுக் கொள்ளத் தலைப்பட்டனர். ஆராய்ச்சிப் பேராசிரியர்களும் அறிவியல் அறிஞர்களும் கூடத் தங்கள் அன்றாட வாழ்க்கை முறையில் சடங்குகளையும் ஆச்சார நம்பிக்கை களையும் மீறி உண்மை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில்லை; அறிவியல் வாழ்க்கை ஆராய்ச்சிக் கூடத்தோடு நின்றுவிடும் நிலை இந்திய மண்ணில் வேர் ஊன்றி விட்டது. கல்விவேறு; வாழ்க்கைவேறு என்னும் போக்கு விரிவடைந்துள்ளது.

முனைவர் அ.பிச்சை காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர். "தமிழியல் ஆய்வு வரலாறு" என்னும் இந்நூலில் தமிழியல்புலத்தின் ஆய்வுக் கூறுகளை வகைதொகைப்படுத்தி எழுதியுள்ள கருத்துக்கள் தமிழ் ஆராய்ச்சி உலகிற்குப் பெரும்பயன் உடையதாக விளங்கும்.

சங்க இலக்கிய ஆய்வு, தற்கால இலக்கிய ஆய்வு, நாட்டுப்புறவியல், ஒப்பிலக்கியம், ஊடகவியல், இலக்கணம், மொழியியல், வரலாற்றுத் தொல்லியல் ஆய்வுகள் என்னும் தலைப்பில் இதுவரை தமிழறிஞர்களும் ஆய்வு மாணவர்களும் நிகழ்த்திய ஆய்வுகளை வரலாற்று நோக்கில் நூல் வடிவில் பதிவு செய்திருப்பது அவருடைய வாழ்நாள் முயற்சி என்று கூறலாம். தொடக்க காலத்திலிருந்து தமிழ்ப் பல்கலைக் கழகங்களிலும் தமிழாசிரியர் மன்றங்களிலும் பிற கருத்தரங்குகளிலும் நடைபெற்ற ஆய்வுகளைக் கூர்ந்து கவனித்து அவற்றின் வன்மை மென்மைகளை இனம்பிரித்துச் சுட்டிக்காட்டிச் செல்வது அரியமுயற்சியாகும். அம்முயற்சியில் பேராசிரியர் பெரும் வெற்றிபெற்றுள்ளார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் காலத்தில் தமிழும் தமிழ்ப் புலவர்களும் கருதுவார் இன்றிப் புறக்கணிக்கப்பட்டனர். அக்காலகட்டத்தில்

தமிழ் மக்கள் ஆய்வு நெறி நின்று உண்மை காணும் இயல்பினர் என்பது தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்கள் வாயிலாக அறியப்படும் உண்மை. தொல்காப்பியமும் திருக்குறளும் போற்றிக் கற்கப்படாத கால இடைவெளி ஒன்று இடைக்காலத்தில் இருந்தது.

புராணம், இதிகாசங்கள், தலபுராணங்கள், வழிபாட்டு நூல்கள் இந்த இடைக்காலத்தில் தன் செல்வாக்கைச் சமுதாயத்திலும் கற்பவர் மத்தியிலும் சிந்தனை அளவில் பெரும் பாதிப்பையும் அதன்வழி சமுதாயத்தில் தாழ்வு மனப்பான்மையையும் எதனையும் ஆராய்ச்சி இன்றி ஏற்றுக் கொள்ளும் சரணாகதிப் போக்கையும் வற்புறுத்தியிருக்கின்றன. அதன் விளைவாகத் தமிழ்ச் சமூகம் வழிவழிவந்த கருத்துக்களையும் நடைமுறைகளையும் மறுசிந்தனைக்கு உட்படுத்தத் தவறியிருக்கிறது. கல்வியாளர் மத்தியிலும் சமுதாயச் சீர்திருத்தங்களை விடுத்துச் சடங்கு சம்பிரதாயங்களுக்கு உரம் இடும் வகையில் தங்களுடைய பேச்சிலும் எழுத்திலும் பழைய வழக்கங்களைப் பெரிதெனப் பேசும் சமயச் சார்பான நடைமுறைகளை ஆராய்ச்சி இன்றி ஏற்றுக் கொள்ளத் தலைப்பட்டனர். ஆராய்ச்சிப் பேராசிரியர்களும் அறிவியல் அறிஞர்களும் கூடத் தங்கள் அன்றாட வாழ்க்கை முறையில் சடங்குகளையும் ஆச்சார நம்பிக்கை களையும் மீறி உண்மை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில்லை; அறிவியல் வாழ்க்கை ஆராய்ச்சிக் கூடத்தோடு நின்றுவிடும் நிலை இந்திய மண்ணில் வேர் ஊன்றி விட்டது. கல்விவேறு; வாழ்க்கைவேறு என்னும் போக்கு விரிவடைந்துள்ளது.

முனைவர் அ.பிச்சை காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர். "தமிழியல் ஆய்வு வரலாறு" என்னும் இந்நூலில் தமிழியல்புலத்தின் ஆய்வுக் கூறுகளை வகைதொகைப்படுத்தி எழுதியுள்ள கருத்துக்கள் தமிழ் ஆராய்ச்சி உலகிற்குப் பெரும்பயன் உடையதாக விளங்கும்.

சங்க இலக்கிய ஆய்வு, தற்கால இலக்கிய ஆய்வு, நாட்டுப்புறவியல், ஒப்பிலக்கியம், ஊடகவியல், இலக்கணம், மொழியியல், வரலாற்றுத் தொல்லியல் ஆய்வுகள் என்னும் தலைப்பில் இதுவரை தமிழறிஞர்களும் ஆய்வு மாணவர்களும் நிகழ்த்திய ஆய்வுகளை வரலாற்று நோக்கில் நூல் வடிவில் பதிவு செய்திருப்பது அவருடைய வாழ்நாள் முயற்சி என்று கூறலாம். தொடக்க காலத்திலிருந்து தமிழ்ப் பல்கலைக் கழகங்களிலும் தமிழாசிரியர் மன்றங்களிலும் பிற கருத்தரங்குகளிலும் நடைபெற்ற ஆய்வுகளைக் கூர்ந்து கவனித்து அவற்றின் வன்மை மென்மைகளை இனம்பிரித்துச் சுட்டிக்காட்டிச் செல்வது அரியமுயற்சியாகும். அம்முயற்சியில் பேராசிரியர் பெரும் வெற்றிபெற்றுள்ளார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் காலத்தில் தமிழும் தமிழ்ப் புலவர்களும் கருதுவார் இன்றிப் புறக்கணிக்கப்பட்டனர். அக்காலகட்டத்தில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தமிழ் நிலைபெறுவதற்கு ஒரு தமிழ்ப் பண்ணையை வித்திட்டு வளர்த்த செய்தி தொடங்கி உ.வே.சா. போன்ற பெருமக்களின் ஆராய்ச்சியின் தொடர் வரலாறும் இன்று தற்கால இலக்கியங்கள் குறித்த ஆராய்ச்சிப் போக்கினையும் அதன் நிறைகுறைகளையும் ஆசிரியர்

# புல்

சென்ற இதழின் தொடர்ச்சி

இரா.இளங்குமரன்

புல் என்றதும் பசுமையே நமக்குத் தோற்றம் தரும். பச்சைக் கம்பளம் விரித்தாற் போலப் புல் பரவிக் கிடந்தது என்பர். பசும்புல் பைம்புல் எனவும் படும். காளை மாட்டின் தோல் நிறம் கொண்டு புல்லைக் காளை, மயிலைக் காளை என வழங்குவது உழவர் வழக்கம்.

மயிலை கருநீலம் படிந்த நிறமுடையது; பார்க்க அழகினது. புல்லை அத்தகைய பொலிவுடையது அன்று. 'புற்கை' யொலிவில்லாத் தன்மை. மங்கல்நிறம் புற்கு எனப்படும் (திருக்.1261). உடலைப் புற்கலம் என்னும் மணிமேகலை (27:197) எளிதாக உடைந்துபோகும் மண்கலம் அன்னது என்பதாம்.

'புற்கை' என்பது புல்லரிசி முதலிய எளிய உணவாம்.

**"புற்கை உண்டும் பெருந்தோ ளன்னே"**

என்பது புறப்பாடல் (64,84).

தினை, சாமை, வரகு என்பவை புற்பயிர்கள்; குதிரை வாலி என்பதும் அவ்வகையே. ஆனால் 'கம்பு' புல்வகையினது எனினும் ஊட்டமிக்கது. கதிர் கெட்டித் தன்மையுடையது. மரக்கம்பு போல் கதிர் இருத்தலால் - மணிகள் இடைவெளி இன்றிச் செறிந்து இருத்தலால் - கம்மம் (கம்பம்) புல் எனப்பட்டது.

புல் உடலில் பட்டால் 'அரிப்பு' உண்டாகும். தோலில் தினவும் தடிப்பும் ஏற்படும். அத்தோல் மாற்றம் 'புல்லரிப்பு' எனப்படும். நாணம், அச்சம் முதலாம் மெய்ப்பாடுகளின் அடையாளம் புல்லரிப்பாகும்.

வைக்கோல் என்னும் நெல்தாளும் அரிப்பு உடையதே; வெப்பமும் மிக்கது. மாடுகளின் உணவாம் அது வெப்பம் மிக்கது. ஆனால் குளிர் காலத்தில் வெப்பமும் கோடை காலத்தில் தட்பமும் தரும் இயல்பினது.

***"தையும் மாசியும் வையகத்து உறங்கு"***

என்றார் பாட்டியார்.

தையும் மாசியும் குளிர்மிக்க மாதங்கள். ஆதலால், வெப்பமாக இருக்கும் வைக்கோல் வேயப்பட்ட வீட்டில் இரவு உறக்கம் கொள் என்பது பொருள். வை அகம், வைக்கோல் வேய்ந்த வீடு!

பழ நாளில் மாடிக் கட்டடம் உடைய செல்வர்கள் மாடியின்மேல் கூரை வேய்ந்து ஆங்குச் சென்று ஒய்வும் உறக்கமும் கொண்டனர். ஏழையர் குடியிருப்பின் ஏற்றம் இஃதாம்!

ஆடு மாடு மேய்வதற்குப் புறம்போக்குப் புல்வெளிகள் ஊர்தோறும் முன்பு உண்டு. இது கால் குழிப்பந்து (கோல்ப்பு) தள்ளல் ஆட்டக் களப் பெருவெளி பசும் புல்லாகப் பேணிக் காக்கப்படுகிறது. முகவை இராமேசுவரப் பகுதியில்

'புல்லணை' என்பதோர் இடமும் பெருமாள் படுத்திருந்த அணை (அரியணை, தலையணை) என்னும் பெருமையும் உண்டு.

வல்லவனுக்குப் புல்லும் படைக்கலம் என்னும் புனைகதையும் பேசப்படும்.

பொறிகள் வழியாக ஏற்படும், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிதல் என்பவை புலம், புலமை எனப்படும். பொறிகள் பொருந்தி எடுத்துக் கொள்ளலால் புல்லலால் - புலம் எனப்பட்டது. புலனைந்தும் வெல்வதே வீரத்திலும் வீரம் எனப்பட்டு மாவீரர் (மகாவீரர், அருகர்) எடுத்துக் காட்டானார்.

"*புலனைந்தும் பொறி கலங்கி*" நிலையழிதலை ஞானசம்பந்தர் பாடினார்.

வேங்கை மரத்தடி நிழலில் வேறுபட அறியாத் தோற்றம் உடைமையால் 'வேங்கை' என்னும் பெயரையும் பொருந்திய நிறத்தால் (புல்லுதலால்) புல்லி, புலி எனவும் பெயர் பெற்றது. அப்பெயரை உடைய வீரன், வேங்கடமலைக் கள்வர் கோமான் 'புல்லி' எனப்பட்டான். வேங்கை மார்பன் என்பானும் இருந்தான்.

புல் உள்ளே துளையுடையது ஆதலால், புல் என்பது 'துளை' என்னும் பொருளும் தந்தது.

புல் என்பது 'பொல்' எனவும் ஆயது. பனை ஓலையால் ஆகிய பெட்டி, பேழை, முறம் முதலியவை ஓலை பிரிந்து துளைபடுதல் பொல்லம் எனப்பட்டது. "பொல்லம் பொத்தலையோ பொல்லம்" என அவற்றை முடைந்து செப்பனிட்டுத் தருவார் கூவிக் கூவி வருவது முன்னை வழக்கம்.

பொல்லம் பொத்துதல் என்பது துளையை அதே நார் கொண்டு செப்பனிட்டுத் தருவதாம். அத்தொழில் அரிதாக நிகழ்கின்றது. அழிவுறு நிலைக்கு வந்துவிட்டது.

பொல் பொள் என்றாலும் துளை என்னும் பொருளே தரும். 'பொள்ளல்', "இலை பொள்ளலாக உள்ளது" ம.வ. பொந்து என்பதும் துளைப் பொருள் தரும். புல்லினமாம் பனைக்குப் 'போந்தை' என்பது பழம்பெயர்.

*"போந்தை வேம்பே ஆர்என வருஉம்*
*மாபெருந் தானையர் மலைந்த பூவும்"*

என்பது தொல்காப்பியம்.

பனையின் உள்ளே வயிரம் இல்லை. நார் நாராக இருக்கும். அதன் உள்ளீடு சோறு எனப்படும். அதை எடுத்தால் உள்ளே பொத்தலாக இருக்கும். பொல்லம் பொத்தல் பார்த்தோம். பொத்தல் என்பது துளையை மூடுதல். பொந்து உடையது போந்து, போந்தை என்று பனையைக் குறித்தது.

பொந்து-பொத்தல்-உடைய பனையோலையும், அதனைச் சுவடி (இணை) சேர்த்த சுவடியும் பொத்தகம் எனப்பட்டது.

*"பொத்தகம் படிக மாலை"*

என்பது தனிப்பாடல். பொத்தகம் என்னும் சொல் பெருங்கதையில் பெரிதும் இடம்பெறும். பொத்தகம் என்பது பின்னே 'புத்தகம்' என வழக்கில் ஊன்றியது. 'புக்'கெனப் போயது இக்கால்!

புத்தகக்கவளி ஏந்தி முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரிடம் வந்ததைப் பெரியபுராணம் கூறும். புத்தகத்தை விரித்து வைத்துப் படிக்கும் வகையில் அமைந்தது புத்தகக் கவளி. செல்வர் வீட்டுப் பிள்ளைகளின் பொத்தகங்களைக் கொண்டு செல்வார் இருந்தனர். அவர்கள் 'தூக்குத் தூக்கி' எனப்பட்டனர். தூக்கு என்பது புத்தகக் கட்டு; அதனைத் தூக்கிச் செல்பவர் தூக்குத் தூக்கி. அப்பெயரால் நாடகமும் திரைப்படமும் முந்து வந்தன.

புல் › புன் என ஆதல் சொல்லியல் முறை. புல்மை›புன்மையாம். புன்கு என்பதோர் மரம் சாலைகளில் இன்றும் காணலாம். நல்ல நிழல் மரம்; அதன் காய் பட்டை ஆயவை மருத்துவப் பயன் மிக்கவை.

புன்க மர விறகின் வெப்பமும் குறைவு. அதனால்,

*"புளியின் நிழலும் புன்கின் தழலும்"*

ஒப்பானவை எனப் பழமொழி எழுந்தது.

புன்கம்பூ, சோளப் பொரி போல் தோற்றம் தரும். அதனால்

*"பொரிப்பூம் புன்கு"*

என்று பாடு புகழ் பெற்றது. புன்கு 'புங்கு' என மக்களால் வழங்கப் படுகிறது.

புன்கனூர் புங்கனூர் எனவும், புன்கப்பயல் என்னும் வசை, 'புங்கப் பயல்' எனவும் மக்கள் வழக்கில் உள்ளது.

ஒரு சொல் எப்படியெல்லாம் தாவித் தாவிப் புதுப்புதுச் சொல்லாய், புதுப்புதுப் பொருளில் வருகிறது என்பதைத் தொடர்ந்து காண்கிறோம். இப்பார்வை ஓர் ஒழுங்குமுறைப்பட்டது. அறிவியல் நெறிப்பட்டது என்பதும் விளங்கவே செய்யும்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" -தொல்லிலக்கணர் ஆணை எனினும், "மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்று ஆழமாக எண்ணி ஆய்ந்தால்தான் புலப்படும் என்றும் கூறினர். ஆழத்துள் ஆழமாகச் செல்வாரும் அறிய முடியா நிலையும் உண்டு. ஏனெனில், அச்சொல் தோன்றிய காலம் - வாழ்வியல் - பழக்கம் - பண்பாடு - ஆகியவற்றில் அதனைப் படைத்த படைப்பாளிக்கும் நமக்கும் உள்ள இட-கால-இடைவெளி பெரிது என்பதை உணர்ந்து மேலாய்வு செய்ய வேண்டும். செய்தால் விளக்கம் இல்லாதனவும் விளக்கம் பெற வாய்க்கும் என்பதை இத்தொடரைக் கற்பார் எண்ணவேண்டும் என்பதாம்.

புல், புன் என ஆயது கண்டோம். அராக (இராக) வகையுள் ஒன்று 'புன்னாக வராளி' என்பது. கொத்தவரும் பாம்பையும் கொண்டாடி மகிழச் செய்வது அவ்விசை என்பது பொருளாம். புல்+நாகம்=புன்னாகம்.

ஆடு பாம்பே எனப் பாடிய சித்தர் பெயர் பாம்பாட்டிச்சித்தர் என்பது. "நாதர் முடிமேல் இருக்கும் நச்சுப் பாம்பே" என்பதனினும், "நாத முடிமேல் இருக்கும் நச்சுப் பாம்பே" என்பதுதான் பொருந்தும் என்பர்.

புல்+கு=புன்கு என ஆனது போல் புல்+து=புற்று ஆயது. கறையான் புற்று எனினும், எறும்புப் புற்று எனினும் உள்ளே வெற்றிடம் உண்டு. கறையான்

எறும்பு முதலியவற்றின் குடியிருப்பு அஃது ஆதலால் உள்மண்ணை வெளியேற்றிப் பசை கூட்டி வலுவாக்கிக் கூடுபோல் செய்தமையால் உள்ளே சுரங்கம்போல் அமைவுடையதாம்.

உள்ளே குடியிருப்பு; வெளியே பாதுகாப்பான கோட்டை. புல்லுக்கு உள்ளே கெட்டித் தன்மையாம் காழ் (வயிரம்) இல்லை. வெளிவயிரம் உண்டு! அது போன்றதே புற்றும் என்பது வியப்பு மிக்க உண்மையாம்.

கொட்டோ கொட்டென எத்தனை மழை கொட்டட்டும். கரையா மண் அமைந்தது கறையான் புற்று. மண்வெட்டி, கடப்பாறை என்பவற்றையும் வந்துபார் எனத் தாங்க வல்லது அது. கறையான் என்னும் பெயரே இருளில் உறைவது என்னும் பொருளதாம். புற்றின் உட்பகுதி குளுமை மிக்கது. இயற்கைச் செந்தணப்பு (A.C) அது.

கரடிக்குப் புற்றுள் இருக்கும் ஈயல் வியப்புமிக்க உணவாகும். இரவில் மின்மினிப்பூச்சி மொய்க்கக் கரடி புற்றுள் கையை விட்டு அள்ளும் தோற்றம் கொல்லர் இரும்பு உலைக்கள வேலையின் போது கிளரும் அனல் பிதிர்களைப் போல் தோன்றும் என்கிறது அகப்பாட்டு (72).

"*கறையான் புற்றெடுக்கக் கரும்பாம்பு குடியிருக்க*" என்பது பழமொழி.

"*நல்லரா உறையும் புற்றம்*" என்பது புறப்பாட்டு (109).

பொல்லம் பொத்துதல் வழக்கம் அருகிப்போனாலும், மக்கள் அணியும் சட்டையில் பொத்தல் இட்டுத் (துளை இட்டு) அதனை மூடப் பொத்தான் தைத்தலும் பெருவழக்காகி விட்டது. பொத்தான் என்பதோ 'பட்டன்' ஆகிப் பொத்தானை ஒழித்துக் கொண்டிருக்கிறது. பொத்தல் போடுதலைக் 'காசாப் போடுதல்' என ஒழித்துக் கொண்டுளது.

பொத்துதல் மூடுதல் பொருளில் வந்தது. மக்கள் வழக்கில் குளிருக்கு உடையை - போர்வையைப் போர்த்துதல் பொத்திக் கொள் என வழங்குகிறது. குளிர் தாங்கவில்லை பொத்திக் கொள்ள ஏதாவது கொடு என்பது முதியர் வழக்காயிற்று. குளிரும் பனியுமாக இருக்கிறது; குழந்தையைப் பொத்திமூடு என்பதும் கேட்கும் செய்தியே!

வசையாகவோ அடாவடித் தனமாகவோ பேசினால் வாயைப் பொத்து என்பதும், பொத்திக் கொண்டு போ என்பதும் மக்கள் வழக்கே.

'கண் பொத்தி' விளையாடுதல், வேடிக்கை செய்தல், திறங்காட்டல் எனப் பலவகையாக விரியும்.

உடலையே ஒன்பான் பொத்தல் குடிசை என்பது சித்தர் வழக்கு.

பொல் - பொத்து - பொத்தல் போலப் 'பொல்லா' என்பதும் மக்கள் வழக்காய் இலக்கிய வழக்காய் அமைந்து விட்டது. பெரு வரலாறும் பெற்றுவிட்டது.

நல்லார் பொல்லார்; நல்லது பொல்லது; நலம் பொலம் என்பவை இணைச் சொற்கள்.

உளி என்பது மரம் கல் முதலியவற்றின் உள் சென்று வேண்டுமாறு உருவாக்கம் செய்ய உதவும் வார்ப்பு இரும்புக் கருவி. அக்கருவிப் பணி

பொல்லுதல் எனப்படும். அக்கருவி படாமலே இயல்பாகவே ஏறக்குறைய அவ்வுருவில் அமைந்த மரம் கல் ஆயவை உளிவேலை படாமையால் பொல்லாதவை எனப்பட்டன. அதனைத் 'தான்தோன்றி' என்றனர். சிவ இலிங்கம் போல் அமைந்த மலை தான்தோன்றி மலை. அதனை வடவர் தம் வழக்கப்படி தம் சொல்லாக்கும் வகையில் 'சுயம்புலிங்கம்' என்றனர். சுயம்புலிங்கம் கிரந்த எழுத்துப் போட்டு 'சம்பு லிங்கம்' எனவும் வழங்கலாயிற்று.

பழமரபு மாறாமல் வழங்குவார் உளிவேலை இல்லாமல் பிள்ளையார் போல் தோற்றம் தந்த கல்லை நட்டு, 'பொல்லாப் பிள்ளையார்' என்றனர்!

திருநாரையூரில் உள்ள பிள்ளையார் பெயர் பொல்லாப் பிள்ளையார். அவரை வழிபட்டு வேண்டிய நம்பியாண்டார் நம்பிக்குத் திருமுறைகள் மறைவுண்டிருந்த இடத்தைக் கண்டு அவற்றைத் தொகுக்க உதவியவர் என்பது சிவனிய வரலாறு.

நம்பியாண்டார் நம்பியே திருமுறைகள் (தேவாரம்) கண்டு திருத்தொண்டர் திருவந்தாதி பாடினார். முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தர் பாடியதாகவும், நான்கு முதல் ஆறு திருமுறைகள் திருநாவுக்கரசர் பாடியதாகவும், ஏழாம் திருமுறை சுந்தரர் பாடியதாகவும் அடைவு செய்தார்.

புல் பொல் ஆகி, பொல்லா ஆகி இறைநிலை எட்டியமை வியப்புறுத்துவதாம்.

கல் ›கள் என்றாகும். கல், கருமை; கள் கருமைப் பொருளது. அதுபோல் பொல், பொள் ஆகும். பொல்லுதல் பொருளே தரும்.

"*பொள்ளல் உடலின் நலம் தீது புந்தி செய்யார்*" என்பது ஞான வாசிட்டம்.

துளையிட்ட தின்பண்டம் எ-டு; வடை.

துளைத்தல் பொருள் தரும் தொழிற்பெயர்.

மரப் பொந்து என்பது பிங்கல நிகண்டு.

பொள்ளாமணி என்பது துளையிடப்படாத மணி, மாணிக்கம். பொள்ளுதல் என்பது பொளிதல், பொளிவு எனவுமாம். உளியை வைத்துச் சுத்தியலால் அடிக்கும் பொழுதின் அளவில் விரைந்து வரக் கூறுதல் 'பொள்ளென வருக' என்பது. "உட்கார்ந்து பொழுது போக்காமல் பொள்ளென வா' என்பது மக்கள் வழக்கு.

"*பொள்ளென மேகம் எழும்*"

என்பது திருவிளையாடல், இதனால் இலக்கிய வழக்கும் ஆயிற்று.

பொளிதல் என்பது கல் கொத்தல், கல்லைப் பிளக்க உளியை அடித்தல், பிளத்தல் ஆகிய பொருளில் வந்தது. பொள்ளாச்சியின் பெயரை ஊரறிய உலகறியச் செய்தவர் அருட்செல்வர் மகாலிங்கனார். ஆனால், அவர் ஊர்ப் பெயரும் பெருமைக்கும் பெருமையானது. அதன் இயற்கை எழிற் பெயர் 'பொழில் வாய்ச்சி' என்பது.

பொழிலாவது சோலை, வாய்ச்சி என்பது வளம் வாய்ந்த இடம். அதன் அருமை உணர்ந்து ஆங்குள அறிவரும், அறிவறி மக்களும் 'பொழில் வாய்ச்சி' என மாற்றுவரோ? அறியோம்.

பொழிலும் காவும் புனலும் மலையும் இறையுறை திருக்கோயில் அன்னவை என்பதை மக்கள் அறியும் காலத்தில் பண்டிருந்த நாவலம் பொழில், ஆலம்பொழில், 'பைம் பொழில்' முதலிய பொழில்களின் அருமை அறிவார். பைம் பொழில் தென்காசியை அடுத்ததோர் ஊர் 'பம்புளி' என வழங்குகிறது.

பொழிமழைக்கு மூலமாக இருப்பதும், பொழிமழையால் பொழிலாயது மாகிய கொண்டு கொடுத்தல் உறவுமுறை மக்கள் உறவுமுறைச் சிறப்புப் போல்வது.

மக்கள் உறவு முறையின் அருமை அயன்மொழியால் தொலைக்கப்பட்டது! கேள் கிளை; உற்றார் உறவு - என்பவை தந்தைவழியும் தாய்வழியுமாம். கேள் என்பதும் உற்றார் என்பதும் தந்தை வழிமுறை. கிளை என்பதும், உறவு என்பதும் தாய்வழிமுறை. இவ்வளமான சொற்களைக் கெடுத்தது 'சம்பந்தம்' 'சம்பந்தி' என்பவை. உறவுப் பெயர், உணவுப் பெயர் முதலாயவற்றையும் கைவிட்ட தமிழனை மீட்கத் தனியொரு மீட்பர் அல்லர் ஊரூர்க்கு மீட்பர்கள் வேண்டும்!

'புல்' பொருந்துதல் பொருளில் தொடங்கியதல்லவா! அதனால் இப் பொருந்துதலொடு நிறைவுறுகிறது. யானே மீள எண்ணினாலும், பிறபிற எண்ணுவார் எண்ணினாலும் இன்னும் புல் பெருகும்.

என் 75 ஆம் அகவையில் எழுதப்பட்ட என் வரலாற்று நூலின் பெயர் 'ஒரு புல்'! 750 பக்கங்களையுடையது'

- தொடர்வோம்

# "பாரதியாரின் பாஞ்சாலி சபதம்" - முனைவர் சு.முத்துஇலக்குமி நூலாய்வு-தந்துரை

முனைவர் பேரா. இ.கி.இராமசாமி,
மதுரை.

"பாரதியாரின் பாஞ்சாலி சபதம்" என்ற திறனாய்வு நூலின் ஆசிரியர் முனைவர் சு.முத்துலக்குமி அரசுக் கல்லூரியில் முதல்வராக இருந்தவர். காந்தியச் சிந்தனையாளராகவும், தமிழ் ஆராய்ச்சியாளராகவும் விளங்கி வருபவர். ஓய்வுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு இலக்கிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு செய்து வருபவர். நடுநிலையான பெண்ணுரிமைச் சிந்தனையாளர்.

1. சாண்டில்யன் நெடுங்கதையில் பெண்மை (1992)
2. மானுடம் தழைக்க... (1994)
3. புதிய தேடல்... தகவல் தொடர்பியல் (1998)
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் பகுதி ஒன்று பாடநூல்)
4. கோட்பாடுகளில் காந்தியம் (1998) (இணைந்து)
5. இலக்கு + பகிர்வு = படைப்பு (2001)
6. தகவல் தொடர்பியல் - இணைவோம் இணையத்தில் (2001)
7. தமிழ்த்தடத்தில் நாவல் மகளிர் (2004)
8. புனைகதை இலக்கியத் திறனாய்வு (2006)
9. இறைத்தமிழ் (2009)
10. அகண்ட ஐரோப்பா அகலாத நினைவுகள் (2009)
11. வாழ்க நீ எம்மான்! (2012)
12. பதினோராம் திருமுறை (2014)
13. பாரதியார் - பாஞ்சாலி சபதம் (2014)
14. சர்வாதிகாரத்திலிருந்து ஜனநாயகத்திற்கு (மொ.பெ.ஆ.) (இணைந்து)2014
15. வையத்துள் வாழ்வாங்கு (பதி.ஆ) (1996)
16. இலக்கியத் தரவுகளில் மகளிர் பதிவுகள் (பதி.ஆ) (2004)
17. உடுமலை நாராயண கவி (அச்சில் 2015)

என இவருடைய நூல்கள் தமிழையும், பிற துறைகளையும் இணைத்தும் ஒப்பிட்டும் காட்டும் தனித்திறம் பெற்றவை. தமிழ் இலக்கியம், இதழியல் ஆகியவற்றில் முதுகலைப்பட்டம் பெற்றவர். முனைவர் பட்டத்தோடு நின்று விடாமல் காந்திய சிந்தனையில் பட்டயப் படிப்பு முடித்தவர். இந்தி மொழி பயின்றவர். கணினிப் பயன்பாடு தெரிந்தவர். பன்முகத்திறன் கொண்ட

பேரா.முத்துலக்குமி செந்தமிழுக்குக் கிடைத்த நித்திலம் ஆவார். இவருடைய தமிழ்ப் பணிக்குத் துணையாகவும் இணையாகவும் நிற்பவர் இவருடைய கணவர் திரு.கந்தசாமி. நம் வாழ்த்துக்குரியவர்!

பேரா.முத்துலக்குமி உருகி உருகிப் பயின்று ஆய்ந்து கள ஆய்வு செய்து தேடுதலில் சிறந்து எழுதிய ஆராய்ச்சி நூல் பாரதியாரின் பாஞ்சாலி சபதம். காசியில் இருக்கும் பாரதியின் மாமா இல்லத்திற்கே சென்று பாரதியின் மாமன் மகனைப் பார்த்து உரையாடி வந்த பெருமை இவர்களுக்கு உண்டு.

வேத வியாசரின் மகாபாரதக் கதை ஆரியவர்த்தத்தில் நடந்ததாகச் சொல்லுவர். பாண்டவர் பூமி இந்திரபிரசத்தம் - இன்றைய தில்லி. கௌரவர் பூமி ஹஸ்தனாபூர் என்ற அஸ்தனாபுரி - உ.பி.யில் உள்ளது. குருச்சேத்திரம் - போர் நடந்த இடம். இன்றைய அரியானா மாநிலத்தில் உள்ளது. இந்தப் பூகோள உணர்வுடன், பின்னணியுடன் மகாபாரதக் கதையினையும் அதன் தழுவலான பாஞ்சாலி சபதத்தையும் கற்பதும் கற்பிப்பதும் கேட்பதும் இனியதாகும். பாஞ்சாலி சபதம் இந்திய விடுதலைப் போர் பற்றிய ஒரு குறியீடு (Symbolism). அதில் வரும் நிகழ்ச்சிச் சித்திரிப்பு, அரசியல் அங்கதம் (Political Satire) ஆகும். தமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்ற பாரதியின் குறிக்கோளின் வெளிப்பாடு என்றும் கொள்ளலாம்.

பாஞ்சாலி சபதத்தின் **அடிமைச்சருக்கம்**, **சூதாட்டச்சருக்கம்** ஆகிய இரண்டையும் அடக்கிய முதற்பாகம் 1912இல் வெளிவந்தது. ஆனால் அதற்கு வரவேற்பு இல்லை. இவ்வுண்மையைப் பாரதியே குறிப்பிட்டுள்ளார்.

***"நான் என் சொந்த பாஷையில் என் மூளையைக்***
***கசக்கிப் பிழிந்து பாஞ்சாலி சபதத்தை எழுதியிருக்கிறேன்.***
***அது நன்றாக இருக்கிறது என்று ஒருவனும் ஒரு கடிதம்***
***எழுதவில்லை.***

படைப்பாளிக்கும் படிப்பாளிக்கும் தமிழ் மண்ணில் நெருங்கிய உறவு அன்றும் இருக்கவில்லை, இன்றும் இல்லை. இந்த உண்மையை இந்த மேற்கோளை எடுத்துக்காட்டியதன் மூலம் பேரா.முத்துலக்குமியும் உணர்ந்தே உள்ளார் எனத் தெரிகிறது. 1924 ஆம் ஆண்டு பாஞ்சாலி சபதத்தின் இரண்டாம் பாகம் வெளிவந்தது. மகாகவி அப்போது உயிருடன் இல்லை என்ற நெகிழ்ச்சியான தகவலையும் நூலாசிரியர் பதிவு செய்துள்ளார்.

இந்தக் குறுங்காவியத்தை மகாகவி பாடியதற்கான காரணங்களை நூலாசிரியர் நேர்த்தியாகச் சொல்லுகின்றார்.

1. ஆங்கிலேய ஆட்சியின் கொடுமை.
2. தாம் இளவயதில் பார்த்த மகாபாரத நாடகம் - அதில் வரும் துகிலுரித்தல் காட்சி.
3. கர்சன் வாலி என்ற வெள்ளையனைக் கொன்ற **திங்கார்** என்ற இந்தியனின் வாக்குமூலம்.
4. மதுராபுரியில் மகாபாரதம் தமிழாக்கம் செய்யப்பட்ட கல்வெட்டுத் தகவல்

அடுத்து நூலாசிரியர் எடுத்துக்காட்டும் நூலின் அடிக்கருத்து (Theme) மிக இன்றியமையாதது.

*"தருமத்தின் வாழ்வுதனைச் சூதுகவ்வும்*
*தருமம் மறுபடியும் வெல்லும்"*

இதில் தன்னேரில்லாத தலைவன் கிடையாது. ஆனால் தன்னேரில்லாத தலைவி இருக்கின்றாள். அவள் தான் பாஞ்சாலி என்கின்றார்.

துரியன் பொறாமை கொண்டதற்கான காரணத்தையும் பழிவாங்கத் துடிப்பதையும் எளிய நடையில் விளக்கிச் செல்லுகின்றார் திறனாய்வாளர்.

1. தருமனுக்கு வந்த புகழ்
2. கண்ணனுக்குப் பாண்டவர் செய்த முதல் மரியாதையும், கண்ணன் தருமனுக்குச் செய்த மஞ்சள் நீராட்டும்.
3. அழகிய பெண்களை ஏவலர்களாகப் பரிசாகப் பாண்டவர்கள் பெற்றது.
4. பளிங்குத் தரையில் துரியன் வழுக்கி விழுந்ததைக் கண்டு பாஞ்சாலி சிரித்தது.

சூதாட்டத்தை அன்றைய சான்றோர்கள் விரும்பியதில்லை. திருதராட்டி ரனுக்கும் விதுரனுக்கும் அதில் உடன்பாடில்லை. ஆயிரங்களான நீதிகளை அறிந்த தருமன் சூதாட்டத்திற்கு இசைந்ததை விதிக்கோட்பாடாக மூல நூலாசிரியர் கொண்டார். அவர் வழியே விதிக்கோட்பாட்டை விளக்கிக் கதைப் பாத்திரங்களோடு பொருத்திக் காட்டுகின்றார் திறனாய்வாளர். எப்பொழுதும் பிரம்மத்தை எண்ணிக் கொண்டிருக்கும் ஞானியாகிய சகாதேவனையும், துன்னும் அதிர்ஷ்டம் உடையவளுமாகிய பாஞ்சாலியையும் பணயத்தில் வைத்துத் தோற்கிறான் தருமன். ஒரே சமயத்தில் தருமன் அறிவையும் இழந்தான்; அதிர்ஷ்டத்தையும் இழந்தான் என்று சொல்லத் தோன்றுகிறது.

சிறந்த விளக்குமுறைத் திறனாய்வாகிய இந்த நூலில் இரண்டொரு கணிணிப் பிழைகள் தென்படுகின்றன. நீர்வழிப்படும்புணை போல என்பது புனை போல என்று உள்ளது (ப.175). நெருடலாய்த் தோன்றும் கருத்தும் உள்ளது! இது "ஊழிற் பெருவலியாவுள" என்பதும் "ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்பதும் முரண்பட்ட கருத்துக்கள் என்கிறார் ஆய்வாளர். திருவள்ளுவரின் இலக்கிய உத்தியாக அதனைக் கொள்ளலாம். கருத்துக்களின் வைப்புமுறையில் ஒன்றை வலியுறுத்தும் போது மற்றொன்றை அடுத்த நிலையில் வைத்துச் சொல்லும் உத்தி. அது 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம்' என்பதும் 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம் பிற செய்யாமை நன்று' என்பதும் அத்தன்மையன.

மொத்தத்தில் இந்தத் திறனாய்வு நூலின் பகுப்பும், விளக்குமுறையும் பிற ஆய்வாளர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பெற்றியுடையன. திறனாய்வாளரின் ஆழ்ந்து அகன்ற படிப்பின் பயனும் மதிப்பும் இந்த நூலில் வெளிப்படுகின்றன. பாரதி படைப்புக் கலையை ஆராய்ந்த அறிஞர்கள் வரிசையில் பேரா.முத்துலக்குமி நிலைத்த இடம்பிடித்து விட்டார். இவருக்கு நம் பாராட்டுக்கள்.

25.2.2016 அன்று செந்தமிழ்க் கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு காந்தி நினைவு நிதி - காந்திய சிந்தனைக் கல்லூரியும், மதுரை செந்தமிழ்க் கல்லூரியும் இணைந்து நடத்திய திறனாய்வு நிகழ்வில் இவ்வுரை நிகழ்த்தப் பெற்றது.

# கட்டளைக்கல்

பேரா. கஸ்தூரி இராமசாமி எம்.எசி., எம்.ஃபில்.,
(பணிநிறைவு)

*"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்."* *(505)*

இது 'தெரிந்து தெளிதல்' அதிகாரத்துள் இடம்பெறும் குறள். ஒருவருடைய பெருமைக்கும் சிறுமைக்கும் அவர் செய்யும் செயலே காரணமாகும் என்பது இதன் பொருள். ஒருவரைப் பணியில் அமர்த்துவதற்கு முன் அவரது பெருமை சிறுமைகளை அறிவதற்கு அவருடைய செயலையே கட்டளைக்கல்லாகக் கொள்ள வேண்டும் என்பது நாம் உய்த்துணரும் நுட்பமான பொருளாகும்.

*"சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி*
*துலையல்லார் கண்ணும் கொளல்"* *(986)*

இது சால்புடைமையை விளக்கும் குறள். தமக்கு ஒப்பில்லாதவர் மாட்டும், தம்மிடம் ஆற்றலிருந்தும் தோல்வியை ஏற்றுக்கொள்ளுவர் சான்றாண்மையாளர். ஆற்றலில் தம்மினும் தாழ்ந்தாரை வெற்றிபெற வேண்டி அவருடன் சமமாகச் சண்டையிடாமல் தோல்வியைத் தாமே ஏற்று அவரைவிட உயர்வதால் சால்பினது அளவு கூடும். அது பணிவு; தோல்வியில்லை. தோல்வியை ஏற்றுக் கொண்டு மேலும் ஒருபடி பெருமையை உயர்த்துதல். 'துலையல்லார்' என்பதற்குத் தராசுக்கோல் போல அல்லாதவர் என்பது பொருள். இங்குச் சான்றாண்மையை மதிப்பிடக் கட்டளைக்கல் துணையாகக் கொள்ளப்பட்டது.

**கட்டளைக்கல்** என்பது யாது? பொன்னை உரைத்து மாற்றுப்பார்க்கும் **பொன்உரை கல்லே** கட்டளைக்கல் எனப்படும். இக்காலத்தில் தங்கத்தின் தரத்தை அறிய காரட் மீட்டர் (Carrat Meter) என்ற மின்னணுக்கருவியைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அதனால் கட்டளைக் கல்லின் பயன்பாடு குறைந்து வருகிறது. எதிர்காலத்தில் கட்டளைக்கல் புழக்கத்திலிருந்தே மறைந்து போகக்கூடிய வாய்ப்பும் உள்ளது. சங்க இலக்கியங்களில் கட்டளைக் கல்லை உவமைப் பொருளாகக் கையாண்டுள்ளனர். பொன் உரைகல்லைக் கண்ணால் காணாமல் அப்பாடல்களைச் சுவைத்து மகிழ்தல் முடியாது.

கருமையான கட்டளைக்கல்லில் பொன்னை உரைக்கும்போது அதன்மீது பொன்துகள்கள் படிந்து மின்னும். மஞ்சள் நிறப் பூந்தாது (Pollen grains) **கருமைநிறத் தும்பி, குயில், கேழல், சிறார்** மீது படியும்போது அவை பொன்உரைகல் போல மின்னும்.

**தும்பி**

**கட்டளை அன்ன மணிநிறத் தும்பி** - கட்டளைக்கல் போல் கருமையான நிறத்தில் தும்பி - வண்டு இருந்ததாக ஐங்குறுநூறு (215) கூறுகிறது. நெடுந்தூரம் மணம் கமழும் பிடவத்தின் பூவில் உள்ள நறுந்தாதை நுகர்ந்த வண்டு பொன் உரைகல்லைப் போல நல்ல நிறம் பெற்றது என்று நற்றிணை பேசுகிறது.

*"செவ்வரி இதழ்சேண் நாறு பிடவின்*
*நறுந்தாது ஆடிய தும்பி, பசுங்கேழ்ப்*
*பொன்உரை கல்லின் நல்நிறம் பெறூஉம்"* (நற்.25:2-4)

பூச்சிவழியாகத் தாதுச் சேர்க்கை (Entomophilous Pollination) நடக்கும் மலர்கள் நல்ல நிறமும் நறுமணமும் கொண்டிருக்கும் என்ற பயிரியல் செய்தியை உறுதிப்படுத்துவதாக இப்பாடல்வரிகள் அமைந்துள்ளன.

**குயில்**

தாதுபடிந்த குயிலின் நிறம் பொன்உரைகல் போல நிறம் பெற்றதைக் குறுந்தொகைப் பாடலொன்று விளக்குகிறது.

*"மின்னின் தூவி இருங்குயில் பொன்னின்*
*உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை*
*நறுந்தாது கொழுதும் பொழுதும்..."* (குறுந். 192:3-5)

தலைவனின் பிரிவாற்றாமையால் வருந்தி நின்ற தலைவியைத் தலைவன் வந்துவிடுவான் என்று சொல்லி ஆற்றுவிக்கின்றாள் தோழி. குயில்கள் மாம்பூவின் தாதைக் குடைந்து நிற்கும் இளவேனில் காலத்தில் எங்ஙனம் ஆற்றுவேன் என்கிறாள் தலைவி. பூந்தாது படிவதால் கட்டளைக்கல் போலப் பொன்னிறம் பெற்றாலும் அது பறக்கும்பொழுது உதிர்ந்துவிட, பழைய நிலையையே அடையும். அதுபோலத் தோழியின் சொற்களைக் கேட்கும்பொழுது சிறிது ஆற்றியிருந்தாலும் பின்னர் மீண்டும் இயல்பான துன்பமே வெளிப்படுகின்றது என்பதைத் தலைவி குறிப்பால் உணர்த்துகிறாள். இக்குறிப்புப் பொருளை உணர்ந்து புரிந்துகொள்ளக் கட்டளைக்கல்லைக் கண்டிருக்க வேண்டும்; அந்த இயற்கைக் காட்சியையும் பார்த்திருக்க வேண்டும். இப்பாடல் பறவை வழித் தாதுச் சேர்க்கை (Ornithophilous Pollination) நிகழ்வதற்குத் தக்க எடுத்துக்காட்டாகும். மாம்பூ பூக்கின்ற காலம் இளவேனிற்காலம் என்பதையும் இப்பாடல் காட்டுகிறது.

**கேழல்**

காட்டுப்பன்றி சங்க இலக்கியங்களில் கேழல் எனக் குறிக்கப்படுகின்றது. ஐங்குறுநூற்றில் 'கேழற் பத்து' தனித்த இடம்பெற்றுள்ளது. கேழல் குறிஞ்சி நிலத்துக் கருப்பொருள்களுள் ஒன்று.

*"நன்பொன் அன்ன புனிறுதீர் ஏனல்*
*கட்டளை அன்ன கேழல் மாந்தும்"* (ஐங்.263:1-2)

பொன் போன்று முற்றிய தினையைக் கட்டளைக்கல் போன்ற நிறமுடைய காட்டுப்பன்றி உண்ணும் என்கிறார் கபிலர். மூங்கில்வேர் போன்ற பருத்த மயிரை உடைய பன்றியின் மீது வெண்கூதாளத்துப் பூக்களின் மஞ்சள்நிறத் தாது படிந்து பொன் உரைத்த கட்டளைக்கல் போல இருந்தது என்கின்றார் பரணர்:

*"வயிரத் தன்ன வையேந்து மருப்பின்*
*வெதிர்வேர் அன்ன பருஉமயிர்ப் பன்றி*

. . . . . . . . . . . . . . . . . . . . . .

*வண்பிணி அவிழ்ந்த வெண்கூ தாளத்து*
*அலங்குகுலை அலரி தீண்டித் தாதுஉகப்*
*பொன்உரை கட்டளை கடுப்பக் காண்வரக்...." (அகம்.178)*

**உழவர் சிறார்**

உழவர்களின் பிள்ளைகள் இரும்பு போன்ற கரிய வலிய மேனியை உடையவர்கள். அவர்கள் முள்ளிச் செடியின் மலர்களைப் பறித்து விளையாடுவர். பசிய கோரைப் புல்லையும் பறித்து விளையாடுவர். மேலும் சம்பங்கோரையின் பூந்துணரை உடைத்து அதன் பொன்னிறமான தாதுப்பொடியை மார்பில் பூசிக் கொள்ளுவர். அப்போது அவர்களுடைய மார்பு பொன் உரைகல் போலத் தோன்றும். அதனை,

*"பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்*
*புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்*
*இரும்புவடித் தன்ன மடியா மென்தோல்*
*கருங்கை வினைஞர் காதலம் சிறாஅர். . . . ." (பெரும்பாண்.220-223)*

என்று பாடியுள்ளார் உருத்திரங்கண்ணனார்.

**நிறைவுரை**

எந்திரமயமாக்கலின் விளைவாகப் பண்டைக் காலத்துக் கருவிகள் பல இக்காலத்தில் புழக்கத்தில் இல்லை. இனிவருங் காலத்தில் கட்டளைக்கல் போன்ற பல பொருட்களைக் காண்பது அரிதாகிவிடும். இது குறையன்று; வளர்ச்சி நிலை. அதுபோன்றே இயற்கைச் சூழலிலிருந்து விலகி வாழும் மக்களுக்குப் பிற உயிரினங்களைப் பற்றி அறிய வாய்ப்பில்லை. அவ்வாறாயின் சங்க இலக்கியக் காட்சிகளை எவ்வாறு புரிந்துகொள்ள இயலும்? கல்லூரிகளில் அறிவியல் துறைக்கு ஆய்வுக்கூடங்கள் இருப்பதுபோல், தமிழுக்கென்று அருங்காட்சிக்கூடம் (Museum) அமைத்துச் சங்க இலக்கியக் காட்சிகளை விளக்கும் ஓவியங்கள், நிழற்படங்கள், மாதிரி வடிவங்கள் ஆகியவற்றை இடம்பெறச் செய்யலாம். தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இக்காலத்தில், இயற்கைக் காட்சிகளைப் படமாக்கித் திரையில் காட்டலாம். அவ்வாறு செய்தால் சங்க இலக்கியச் சித்திரிப்புக்களைச் சரியாகவும் எளிதாகவும் புரிந்து கொள்ள இயலும்; கற்பதில் ஒரு நாட்டமும் ஏற்படும். மேலும் தமிழ்ச் சொற்களோடு அவற்றின் பொருளும் தமிழின் அடையாளங்களும் காப்பாற்றப்படும். தமிழிலக்கியக் கல்வி வளரும். பழந்தமிழ்ச் சொற்கள் புழக்கத்தில் நிற்கும்.

# அறியத் தோன்றும் அகரக் கிளவி

**முனைவர் மு.கற்பகம்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தியாகராசர் கல்லூரி,
மதுரை.

தமிழ் இலக்கண மரபில் புணர்ச்சி என்பது அடிப்படையான கூறாகும். நிறுத்த சொல்லின் ஈறாகெழுத்தொடு குறித்துவரு கிளவியின் முதலெழுத்து இயையும் புணர்ச்சியில் உயிரீற்றுப் புணர்ச்சி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். உயிர் மயங்கியல் பகுதியில் உயிரீற்றுச் சொற்கள் வன்கணத்தோடும் சிறுபான்மை பிறகணங்களோடும் புணரும் இயல்பு விளக்கப்படுகின்றன. இவை அனைத்தும் பதப்புணர்ச்சியின் பாற்பட்டதாகும்.

இத்தகு புணர்ச்சியில் 227 முதல் 232 வரையிலான நூற்பாக்களுக்கு உரையாசிரியர்கள் கொடுக்கின்ற உரைகளும் சான்றுகளும் முரண்பாடானவை களாகக் காணப்படுகின்றன. அத்தகு முரண்பாட்டிற்கான காரணம் சூத்திரங்கள் இடம் மாறிவிட்டனவா? அல்லது மூலநூலின் காலத்திற்கும் உரைகாரர்களின் காலத்திற்குமான இடைவெளியினால் வந்த தெளிவின்மையா? என்பதனை விளக்க இவ்வாய்வு முற்படுகின்றது.

தொல்காப்பியர் ஆகார ஈற்றுப் புணர்ச்சி குறித்துக் குறிப்பிடுகையில்

"குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
**அறியத் தோன்றும் அகரக் கிளவி**"[1]

என்கிறார்.

இதற்கு உரையாசிரியர்[2] "குற்றெழுத்தின் முன் நின்ற ஆகார வீற்றிற்கும் ஓரெழுத்து ஒருமொழி ஆகார வீற்றிற்கும் (நிலைமொழிக்கண்) அகரமாகிய கிளவி அறியத் தோன்றும்" என்று குறிப்பிடுகின்றார். மேலும் இதற்கு விளக்கம் அளிக்கும் உரையாசிரியர் 'அண்ணாஅத்தேரி, உவாஅத்து ஞான்று கொண்டான்... இவை பிற முடிபு' என்கிறார்.

இதற்கு வே.வேங்கடராசுலு ரெட்டியார்[3] "ஆசிரியர் 'அகரக்கிளவி தோன்றும்' என்று கூறியிருப்ப; அண்ணாஅத்தேரி என அத்துச் சாரியையும், உவாஅத்து ஞான்று கொண்டான் என அத்தும் ஞான்றும் வருதலையும் கொள்ளுமாறு உரையாசிரியர்கள் கூறுவது ஆசிரியர் கருத்திற்குப் பொருந்தும் எனத் தோன்றவில்லை" என்று சுட்டிச் செல்கின்றார். இஃது ஏற்புடைத்தாகும். இதற்கடுத்த நிலையில்

**"இராவென் கிளவிக் ககர மில்லை"**[4]

என்று கூறிய தொல்காப்பியர் 'இரா' என்பதற்கு அகரம் வருவதனை விலக்கினார். ஆனால் தொல்காப்பியரே,

*"உம்மை யெஞ்சிய விருபெயர்த் தொகைமொழி*

*மெய்ம்மை யாக வகரம் மிகுமே"*[5]

என்று குறிப்பிடுகின்றார். இதற்கு வே. வேங்கடராசுலு ரெட்டியார்[6] "இராஅப்பகல் என்பதில் அகரம் வருதல் என்னையோ எனின் இராப்பகல் என்பது தாய்தந்தை என்பதுபோல் உம்மை தொக்க இருபெயர்த் தொகைமொழியாதலின் அகரம் தோன்றப் பெற்றது" என்கிறார்.

*யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்*

*ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே"*[7] என்பதற்கும்

*"வல்லெழுத்து மிகினும் மானமில்லை"*[8] என்பதற்கும்

விளக்கம் அளிக்கும் உரைகாரர்கள் யா என்னும் மரத்தை உணர்த்தும் சொல்லும் பிடா, தளா என்னும் சொல்லுமாகிய மூன்று சொற்களும் மெல்லெழுத்து மிக்குமுடியும். மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றமில்லை என்கின்றனர். சான்றாக

*யாஅங்கோடு / யாஅக்கோடு*

*பிடாஅங்கோடு / பிடாஅக்கோடு*

*தளாஅங்கோடு / தளாஅக்கோடு*

என்பதாக அமையும். அவ்வாறெனில் இதற்கு முந்தைய நிலையில்

*"நிலாவென் கிளவி யத்தொடு சிவணும்"*[9]

என்பதற்கு 'நிலாஅத்துக் கொண்டான்' என்றே சான்றளித்திருத்தல் வேண்டும். அங்ஙனமல்லாது 'நிலாத்துக் கொண்டான்' என வகுத்து "நிலைமொழித் தொழில் வருமொழித் தொழிலை விலக்குமாகலின் அத்து வகுப்ப அகரம் வீழ்ந்தது" என்கின்றனர். அங்ஙனமாயின் அண்ணாஅத்துக்குளம் என்பதில் மட்டும் எங்ஙனம் அகரம் வீழாதிருந்தது? என்ற வினா எழுகின்றது.

இராவென் கிளவிக்கு அகரமில்லை என்பதனையடுத்து 'நிலா' வினை வைத்தமையினால் அகரம் வீழ்ந்தது என அமைதியடைவோமாயின் அடுத்தடுத்து வருகின்ற யா, பிடா, தளா, மா என்பனவற்றில் எங்ஙனம் அகரம் இடம்பெற்றது. இச்சொற்களும் புணர்ச்சியின்கண்

*யாங்கோடு / யாக்கோடு*

*பிடாங்கோடு / பிடாக்கோடு*

*தளாங்கோடு / தளாக்கோடு*

என்றே வழங்கியிருத்தல் வேண்டும். அதைவிடுத்து ஆண்டு அகரம் இடம்பெறுதல் பொருத்தப்பாடாயில்லை.

அதுமட்டுமல்லாது 'யாஅத்துக்கோடு' என அத்துச் சாரியை வகுத்தமையும் பொருந்தாது. இதற்கு "ஆசிரியர் நிலா என்னுஞ் சொல்லொன்றற்கு மட்டும்

அத்துச் சாரியை விதித்தாரேயன்றி இவ்விற்றுச் சொற்களுக்குப் பொதுவிதியாக விதித்திலர். அதனால் அஃது ஆசிரியர் கருத்தாகாது" என்னும் ரெட்டியாரின்[10] கூற்று அரண் சேர்ப்பதாயிருக்கின்றது.

உரையாசிரியர்[11] " 'யாமரக் கிளவி என்பதனைக் குறியதன் முன்னரும்' என்பதன் பின் வையாதவதனால் இராவிற் கொண்டான், நிலாவிற் கொண்டான் என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க" என்கிறார்.

அவ்வாறாயின் யாஅத்துக்கோடு எனுமிடத்து அகரம் வீழாது நிலாத்துக் கொண்டான் என்பதில் அகரம் வீழ்ந்தது என்பது முரண்பாடானதாகத் தோன்றுகிறது.

227 முதல் 232 வரையிலான நூற்பாக்களுக்கு உரையாசிரியர் வழங்கியுள்ள சான்றுகளை உற்றுநோக்கினால் குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும் என்பதன் பின்னர் யா, பிடா, தளா, மாமரம், ஆ, மா என்னும் விலங்கின் பெயர்கள் குறித்த நூற்பாக்கள் அமைந்திருக்க வேண்டும். அதன் பின்பே 'இராவென் கிளவிக்கு அகரமில்லை' என்பது இடம்பெற்றிருக்க வேண்டும்.

'இராக் கொண்டான்' எனுமிடத்து அகரம் இடம்பெறுவதில்லை என்னும் விதியினை நோக்குமிடத்து,

*யாஅங்கோடு*

*மாஅங்கோடு*

என ஆறாம் வேற்றுமைப் பொருளினை உணர்த்துமிடத்து அகரம் பெறுகின்றமையும் ஏழாம் வேற்றுமைப் பொருண்மையினை உணர்த்துமிடத்து (இரவுக் காலத்தின்கண் கொண்டான்) அகரம் பெறாமையும் கவனத்திற்குரிய தாகின்றது. ஆறாம் வேற்றுமைப் பொருளை உணர்த்துவன அது, அ, ஆ என்பனவும் குறிப்பிடத்தக்கன.

அதன்பொருட்டே இராவென் கிளவிக்குப் பின்னர் 'நிலா' என்னும் கிளவியை வைத்திருக்கலாம் என்ற சமாதானத்திற்கு உடன்படுவதா யிருக்கின்றது. இருப்பினும் ரெட்டியார்[12] இராக்கொண்டான் என்பது போல வினை கொண்டு முடியும் வழி வரும் முடிபு கூறப்பட்டது என வேறுபாடு அறிக என்று குறிப்பிடுவதும் ஏற்றுக்கொள்வதாயிருக்கின்றது.

சான்றுகளை நோக்குமிடத்துச் சூத்திரங்கள் இடம் மாறிவிட்டனவென்றே தோன்றுகின்றது. உரையாசிரியர்கள் வழங்குகின்ற சான்றுகளும் அவரவர் காலத்திற்கேற்ற முறையில் சிலவற்றைப் புதிதாகச் சேர்த்துள்ளமையும் முரண் பாடானவைகளாகவே காணப்படுகின்றன. இவைகளை நீக்கிக் கற்பதும் கற்பிப்பதும் இலக்கண ஆர்வலர்களின் கடனாகும்.

**குறிப்புகள்**

1. தொல். எழுத்து. 227
2. மேலது.
3. வே. வேங்கடராகுலு ரெட்டியார், தொல். எழுத்ததிகாரவாராய்ச்சி, 226
4. தொல். எழுத்து. 228
5. மேலது. 224
6. வே. வேங்கடராகுலு ரெட்டியார், மு. நூல். 227
7. தொல். எழுத்து. 230
8. மேலது. 231
9. மேலது. 229
10. வே. வேங்கடராகுலு ரெட்டியார், மு. நூல். 230
11. தொல். எழுத்து. 231
12. வே. வேங்கடராகுலு ரெட்டியார், மு. நூல். 228

## அப்துல் கலாமின் பொன்மொழிகள்

* நீங்கள் சூரியனைப் போலப் பிரகாசிக்க வேண்டுமானால், முதலில் சூரியனைப் போல எரிய வேண்டும்.
* கடின உழைப்பு, நேர்மைக்கு மாற்று எதுவும் இல்லை; நிச்சயமாக எதுவும் இல்லை.
* கரைகளைக் கடக்கும் துணிவிருந்தால்தான் புதிய கடல்களை கண்டுபிடிக்க முடியும்.
* அதிகம் பயணிக்காத பாதைகளில் செல்லும் துணிவை வளர்த்தெடுங்கள். அதுதான் உண்மையான தலைமைப் பண்பு.
* ஒரு தேசம் ஊழலில்லாமலும், அறிவாளிகளின் தேசமாகவும் இருக்க மூன்று பேரால் மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்த முடியும். தந்தை, தாய், ஆசிரியர்தான் அந்த மூன்று பேர்.
* எல்லாப் பறவைகளும் மழைக் காலங்களில் கூடுகளில் அடையும். ஆனால் கழுகு, மழையைத் தவிர்க்க மேகத்துக்கு மேலாகப் பறக்கும்.
* அறிவுதான் உங்களை சிறந்தவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும் மாற்றுகிறது.
* தேசம் என்பது எந்தவொரு தனிமனிதனுக்கும், நிறுவனத்துக்கும், கட்சிக்கும் அப்பாற்பட்டது.
* கருணையில்லாத அறிவியல் முழுமை பெறாது.
* ஒரு தேசத்தின் மகுடமே அதன் சிந்தனையாளர்கள்தான்.
* உங்களுக்கு சிறகுகள் உள்ளன. தவழ்ந்து செல்லாதீர்கள். அதைக் கொண்டு, மேலே மேலே பறந்து செல்லுங்கள்.

# சங்க இலக்கியத்தில் 'வான்மழை' மரபும் மாற்றமும்

முனைவர் உ.கருப்பத்தேவன்,
உதவிப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

**முன்னுரை**

இலக்கியங்கள், மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும். என்னதான் இலக்கியங்கள் தொன்றுதொட்டு அறநெறிகளை எடுத்துக்கூறினும், காலச்சூழலில் மக்களின் உள்ளம் நெறிபிறழவே செய்யும். மழைக்குப் பிறப்பிடமான 'மேகம்' என்னும் சொல் முதன்முதலில் சீவக சிந்தாமணியில்தான் பயின்று வந்துள்ளது. 'மழை' மனித வாழ்க்கையின் அடிப்படை ஆதாரமாகும். மழையால் தான் நாடு வளம் பெறுகின்றது. நாடு நலம் பெறவும், நாட்டு மக்கள் அனைத்து வளங்களையும் பெற்று வளமுடன் வாழவும், பருவமழை பொய்க்காமல் பெய்யவேண்டும். 'மழையும் காற்றும் பராசக்தி செய்கைகாண்' என்றார் பாரதியார். சங்க இலக்கியத்தில் மழை என்னும் சொல்லுடன் மழையைக் குறிக்கும் பிறசொற்களும் மழைக்கு மூலகாரணமாக விளங்கும் 'மேகம்' என்னும் சொல்லும், அப்பொருள்தரும் பிறசொற்களும் சங்க இலக்கியங்களில் ஆளப்பெற்றுள்ள பாங்கினையும், அவற்றின் வாயிலாக அறியலாகும் தமிழரின் வாழ்வியல் நெறிமுறைகள், தொழில்கள், இயற்கைச் சூழ்நிலைச் செயற்பாடுகள், மழைநீரின் தேவை, பருவமழை பொய்த்தலினால் உலக உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்கள், அச்சொற்கள் உவமை மற்றும் உருவகங்களாகப் புலவர்களால் ஆளப்பட்டுள்ள பாங்கு ஆகியவற்றையும், வான்மழை மரபில் ஏற்பட்ட மாற்றங்களையும் விளக்குவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

**குறுந்தொகையில் 'மழை'**

குறுந்தொகையில் 'பெயல்' (குறுந்.29:2, 161:1. 40:3. 126:3, 165:4, 261:2), 'துளி' (குறுந். 35:4, 382:1), 'மழை' (குறுந்.42:2, 90:3, 158:3, 176:7, 197:2), 'மாரி' (குறுந். 66:5, 91:5, 251:2), 'கார்' (186:1), 'புயல்' (குறுந்.391) முதலான சொற்கள் மழையைக் குறிக்கப் பயின்று வருகின்றன. 'துவலை' (குறுந். 55:2) என்னும் சொல்லும் மழையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

*"மார்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்*
*பொங்குபிதிர்த் துவலையொடு மங்குல் தைஇக்*
*கையறவந்த தைவரல் ஊதையொடு"* (குறுந். 55:1-3)

துவலை பெரிய கழியிடத்தேயுள்ள நீலமணிபோலும் நிறமுடைய பூக்கள் குவியுமாறு மழைத்தூவுதலை உடையமேகம். குறுந்தொகைப் பாடல்களில் **'மழை'** (குறுந். 94:7, 259:1, 84:3, 108:1, 144:6), **'வானம்'** (குறுந். 287:8), **'வான்'** (குறுந். 270:4), **'எழிலி'** (குறுந், 314), **'மாரி'** (குறுந். 98:5, 222:2, 117:1), **'கார்'** (குறுந். 148:5, 188:2, 233:4), **'மழைக்கண்'** (குறுந், 72:5, 86:1) ஆகிய சொற்கள் மழைதரும் மேகத்தைக் குறிக்கப் பயின்று வந்துள்ளன.

நள்ளிரவில் இடி, மின்னலுடன் பெய்த மிகுதியான மழையினால் பெருக்கெடுத்த அருவிநீர் மலைக்குகைகளில் நிரம்பும் வளமுடைய நாட்டைப் பெற்றவன் தலைவன். அவனுக்கு இரவுக்குறி மறுக்கப்பட்ட போதும் அவன் தலைவியுடன் கொண்ட காமப்புணர்ச்சி என்றும் தேயாது என்பதைப் பின்வரும் குறுந்தொகைப் பாடல் உணர்த்தும்.

*"காமம் ஒழிவ தாயினும் யாமத்துக்*
*கருவி மாமழை வீழ்ந்தென அருவி*
*விடரகத் தியம்பு நாடவெம்*
*தொடர்பும் தேயுமோ நின்வயி னானே"* (குறுந். 42)

'மலைகள் நிறைந்த பாலை நிலத்தின் அரிய வழியைக் கடந்து சென்ற தலைவன் மீண்டு வருவதாகக் கூறிச்சென்ற கார்ப்பருவம் வருவதற்குள் முதுவேனில் காலத்திலேயே திடீரெனப் பெய்த நிலையற்ற மழையினைப் பருவமழை என்று அறியாமையால் கருதிய கொன்றை மரங்கள் தம் கொம்புகளில் நெடிய பூங்கொத்துக்களை மலர்வித்தன' எனத் தோழி தலைவியை ஆற்றுப்படுத்துவதாகக் கோவத்தனார் பாடிய குறுந்தொகைப் பாடல் வருமாறு:

*"மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை*
*கல்பிறங் கத்தம் சென்றோர் கூறிய*
*பருவம் வாரா அளவை நெரிதரக்*
*கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த*
*வம்ப மாரியைக் காரென மதித்தே"* (குறுந். 66)

இப்பாடலில் நிலையற்ற திடீரெனப் பெய்யும் புதிய மழையை 'வம்பமாரி' என்னும் சொற்றொடர் குறிக்கின்றது. இது 'கார்' என்னும் கார்ப்பருவத்தைக் குறிக்கின்றது.

குறுந்தொகையில் 'பெயல்' என்னும் சொல் 18 பாடல்களில் மழையைக் குறிக்கின்றன. 3 பாடல்களில் 'துளி' என்னும் சொல் மழையைக் குறிக்கின்றன. 'மழை' என்னும் சொல் 19 பாடல்களில் மழையைக் குறிக்கின்றன; 11 பாடல்களில் மழைமேகத்தைக் குறிக்கின்றன. 'துவலை' என்னும் சொல் இரண்டு பாடல்களில் மழையைக் குறிக்கின்றன. 'தளி' என்னும் சொல் ஒரு பாடலில் மழையைக் குறிக்கின்றது. 'மாரி' என்னும் சொல் 6 பாடல்களில் மழையையும், 8 பாடல்களில் மழைக்காலத்தையும் குறிக்கின்றன. 'கார்' என்னும் சொல் 8

பாடல்களில் மழைக்காலத்தைக் குறிக்கின்றன. ஒரு பாடலில் மழையைக் குறிக்கின்றது. 'வானம்' என்னும் சொல் 3 பாடல்களில் மழை மேகத்தைச் சுட்டுகின்றன. 3 பாடல்களில் 'வானம்' என்னும் சொல் மழைமேகத்தைக் குறிக்கின்றது; 'வான்' என்னும் சொல் ஒரு பாடலில் மழைமேகத்தைக் குறிக்கின்றது.

**ஐங்குறுநூற்றில் 'மழை'**

ஐங்குறுநூற்றுப் பாடல்களில் மாரி, மழை, பெயல், துவலை, தூவல், துளி, தளி, வானம் ஆகிய சொற்கள் மழையைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்றுள்ளன. மழை, எழிலி, வானம், கார், மை ஆகிய சொற்கள் மழைமேகத்தைக் குறிக்கின்றன. கார், மழைக்கண் என்னும் சொற்கள் மழைக்காலத்தைக் குறித்து வருகின்றன.

மழையின் வரவறிந்து மகிழ்ந்து ஆர்ப்பரித்து ஆடும் மலைநாட்டுத் தலைவனே எனத் தோழி தலைவனை விளித்துக் கூறுகின்றாள்.

*"மழை வரவு அறியா மஞ்ஞை யாலும்*
*அடுக்கல் நல்லூர"* *(ஐங். 298:12)*

நுண்ணிய மழையால் துளிர்ந்த நறுமணமிக்க மலர்கள் பரந்து குளிர்ச்சி தருவனவாயினும், தன் இனிய தலைவியின் துணையில்லாமல் முதிர்ந்த சோலையைக் கொண்ட காட்டைக் கடந்து செல்வது மிகுந்த வெப்பத்தைத் தருவதாகத் தலைவன் தன் பாங்கனிடம் கூறுகின்றான்.

*"நுண்மழை தளித்தென நறுமலர் தாஅய்த்*
*தண்ணிய வாயினும் வெய்ய மன்ற*
*மடவரல் இன்துணை ஒழியக்*
*கடமுதிர் சோலைய காடிறந் தேற்கே"* *(ஐங்.328)*

'குன்றக் குறவனது புல்லால் வேய்ந்த சிறுகுடிலை எங்கும் திரிகின்ற பயன் தரத்தக்க மழை மேகங்கள் மறைக்கின்ற உயர்ந்த உச்சியைக் கொண்ட மலைநாட்டிற்குரியவன்' எனத் தோழி தலைவனது நாட்டு வளத்தைத் தலைவிக்குக் கூறுகின்றாள்.

*"குன்றக் குறவன் புல்வேய் குரம்பை*
*மன்றா டிளமழை மறைக்கும் நாடன்"* *(ஐங். 276:12)*

இவ்வகையில் ஐங்குறுநூற்றுப் பாடல்களில் மழை, மழைமேகம், மழைக்காலம், மழைக்கண் முதலான சொற்கள் பயின்றுவந்து, அகத்துறைச் செய்திகளைச் சுவையொடு கூறி, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றன.

**அகநானூற்றில் 'மழை'**

அகநானூற்றுப் பாடல்களில் 'உறை', பெயல், தளி, மாரி, பயம், மழை, துளி, வான், துவலை, வானம் முதலான சொற்கள் மழையைக் குறித்து

வருகின்றன. மழை, புயல், கொண்மூ, கொண்டல், மாசி, கார், வானம், வான், தளி முதலான சொற்கள் மழைமேகத்தைக் குறித்து வருகின்றன. கார், மாரி, மழைக்கண் முதலான சொற்கள் மழைக் காலத்தைக் குறித்து வருகின்றன.

முல்லை நிலம் மழையற்ற தம் வறட்சியை விட்டொழித்து விட்டன. மேகம் இடியுடன் முழங்கி மழைத்துளிகளை விரைந்து சிதறிக் கார்ப்பருவத்தைத் தோற்றுவித்தமையால் காடு புதியதோர் அழகினைப் பெற்றது என்னும் தகவலை,

*"கருவி வானம் கதழுறை சிதறிக்*
*கார்செய் தன்றே கவின்பெறு கானம்"* (அகம். 4:6-7)

என்னும் அகநானூற்றுப் பாடலடிகள் தெரிவிக்கின்றன. இப்பாடலடிகளில் 'வானம்' என்னும் சொல் கருமேகத்தையும், **'உறை'** என்னும் சொல் மழையையும், **'கார்'** என்னும் சொல் கார்காலத்தையும் குறிக்கின்றன.

'பெரிய கடலிலே நீரை முகந்துகொண்டு பெருங்கூட்டமாகத் திரண்டு வருகின்ற மேகங்கள் இருண்டு உயர்ந்த வானத்தின்கண் வலமாக எழுந்து தோற்போர்வையைக் கொண்ட முரசினைப் போல இடித்து முழங்குகின்றது' எனத் தோழி தலைவன் வரும் வழியின் கடுமையைக் கூறுவதன் வாயிலாக, அவன் சிறைப்புறமாக இருக்க அவன் தலைவியை மணந்துகொள்ளும் வேட்கையைத் தூண்டுகின்றாள்.

*"பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ*
*இருண்டுஉயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்*
*போர்ப்புஉறு முரசின் இரங்கி"* (அகம். 188:1-3)

'தண்மையான மழைக் காலத்தில் ஈன்ற பசுமையான கொடியில் உள்ள முல்லையின் கூர்மையான வெண்மையான அரும்புகள் கட்டவிழ்ந்து மலர்வதை'ப் பின்வரும் அகநானூற்றுப் பாடலடிகள் தெரிவிக்கின்றன.

*"தண்கார்க்கு ஈன்ற பைங்கொடி முல்லை*
*வைவாய் வான்முகை அவிழ்ந்த கோதை"* (அகம். 144:3-4)

இவ்வாறு அகநானூற்றுப் பாடல்களில் மழை குறித்து வரும் சொற்கள் மற்றும் தொடர்கள் வாயிலாக மழையினால் இயற்கை வளங்கள் பெருகுதல், மழையில்லாத காலத்தில் ஐந்திணை மக்களும் பிற உயிரினங்களும் அடையும் துயரங்கள், மழைமேகங்களின் செயற்பாடுகள், துளி, துவலை, பெயல் ஆகிய சொற்கள் தொழிலாகுபெயராக மழையைக் குறித்து வருதல், மழைக்கால நிகழ்வுகள், மழை குறித்து வரும் சொற்கள் உவமையாக ஆளப்படுதல், அரசர்கள் குறித்த கொடைச் செயல்கள், மக்களின் அகவாழ்க்கை முறை, மழைபெய்தலால் ஏற்படும் தொழில்கள் ஆகியன குறித்து அறியமுடிகின்றது.

**நற்றிணையில் 'மழை'**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணையில் **மழையைக்** குறிப்பதற்கு மாரி, பெயல், மழை, துளி, தளி, துவலை, கார், வானம், பாட்டம்

ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பெற்றுள்ளன. மழைமேகத்தைக் குறிப்பதற்கு எழில், வானம், மழை, கார், வான், கொண்டல் ஆகிய சொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. பெண்களின் குளிர்ச்சி பொருந்திய கண்களைக் குறிக்க **மழைக்கண்** என்னும் சொல்லாட்சி பயன்படுத்தப் பெற்றுள்ளது.

'நேர்மையான இடத்தைக் கொண்ட உப்புப் பாத்தியிலே கடலின் நீரைக் கொணர்ந்து பாய்ச்சி உப்பை விளைவித்துக் கொள்வதன்றி மழையை விரும்பாத வேளாண்மையையுடைய கடற்கரைச் சோலையைச் சூழ்ந்தது எமது சிறுகுடி' என்று தோழியின் கூற்றாக உலோச்சனார் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

***"நேர்கண் சிறுதடி நீரின் மாற்றி***
***வானம் வேண்டா விழவின்எம்***
***கானலம்"*** *(நற்.254: 10-12)*

'கடலிடத்தே மீன்வேட்டைக்குச் சென்றோர்க்கு ஆங்குத் தப்பாது பெற வேண்டிய மழை பொய்யாது பெய்கிறது. அதனால் வலைவளம் சிறக்கிறது. அந்த வலைவளத்தால் வந்த பொருளைப் பிறநாட்டில் சென்று பரதவ மக்கள் விலைக்கு விற்றுவருவர். ஆங்குப் பெற்ற பொருளை ஈந்து கரிய பனையின் இனிய கள்ளைப் பெற்று உண்பவராய் மகிழ்ந்து இருப்பர்' என நெய்தல் நில மக்கள் வாழ்க்கையை உலோச்சனார் பாடியுள்ளார்.

***"வேட்டம் பொய்யாது வலைவளம் சிறப்பப்***
***பாட்டம் பொய்யாது பரதவர் பகர***
***இரும்பனந் தீம்பிழி உண்போர் மகிழும்"*** *(நற்.38:1-3)*

'ஒலிக்கும் கடலில் விழுந்து நீர் பருகியதனாலாகிய நிறைந்த சூல்கொண்ட மழைமேகம், திசைகளின் அகன்ற இடமெல்லாம் மறையும்படி பரவி உயர்ந்த கொடுமுடிகள் புரண்டு விழுமாறு செய்து முழங்கிய இடியினாலே பாம்புகளுடன் மோதி விசும்பில் உயர்ந்த முடியையுடைய குன்றுகளை ஒருங்கே சூழ்ந்து சிதைந்த மழையின் துளியை யாண்டும் பெய்து ஒழிந்தது' எனப் பெருங்குன்றூர்கிழார் பாடியுள்ளார்.

***"முழங்குகடல் முகந்த கமஞ்சூல் மாமழை***
***மாதிரம் நனந்தலை புதையப் பாஅய்***
***ஓங்குவரை மிளிர ஆட்டிப் பாம்புஎறிபு***
***வான்புகு தலைய குன்றம் முற்றி***
***அழிதுளி தலைஇய பொழுது"*** *(நற்.347:1-5)*

'பச்சைத் தசையில் பாய்ச்சியதனால் சிவந்த அம்பைப் போலச் செவ்வரி பரந்த ஆராய்ந்த அணிகலன்களை அணிந்த தலைவியின் குளிர்ச்சியுற்ற கண்களில் பொருந்தாமல் பார்வையினால் வருத்தும் எனது நெஞ்சம் உய்யும் வழி கூறுவாயாக' என மாமூலனார் பாடிய பாடலின் தலைவன் தோழியிடம் கூறுகின்றான்.

*"பச்சூன் பெய்த பகழி போலச்*
*சேயரி பரந்த மாஇதழ் மழைக்கண்*
*உறாஅ நோக்கம் உற்றஎன்*
*பைதல் நெஞ்சம் உய்யு மாறே"* (*நற். 75: 7-10*)

இவ்வாறு நற்றிணைப் பாடல்களில் மழை, மழைமேகம், மழைக்காலம், தலைவியின் சிறப்பைக் குறிக்கும் மழைக்கண் போன்ற செய்திகளின் வாயிலாகத் தலைவி, தலைவன், பாங்கற் கூட்டம் ஆகியோர் சார்ந்த பண்புகளையும், மேகம் இடி, மின்னலுடன் கூடிய மிகுதியான மழையைப் பெய்வதனால் காணப்பெறும் இயற்கை நிகழ்வுகளையும், ஐந்திணை சார்ந்து வரும் அகப்பொருள், புறப்பொருள் செய்திகளையும் அறியமுடிகின்றது.

**கலித்தொகையில் 'மழை'**

கலித்தொகையில் **மழையைக் குறிக்க** ம்ழை, பெயல், மாரி, வான், கார், தளி, துளி, பாடு முதலான சொற்கள் பயன்படுத்தப்பெற்றுள்ளன. **மழைபெய்யும் கருமேகத்தைக்** குறிப்பதற்கு மழை, மஞ்சு, பெயல், கொண்மூ, புயல், வானம், கார், மை, மாரி, எழிலி முதலான சொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. **கார்காலத்தைக்** குறிக்கக் கார் என்னும் சொல்லும், பெண்களின் குளிர்ந்த கண்களைக் குறிக்க **'மழைக்கண்'** என்ற சொல்லும் பயின்று வந்துள்ளன.

'நறுமணமிக்க காந்தள்செடி பெரிய அரும்புகளை நாள்தோறும் ஈன்றன. பள்ளங்கள் நீரால் நிரம்பின; அருவிகள் ஓ என ஒலித்து வீழ்ந்தன. பெருமழை பெய்யும் அச்சம் தரத்தக்க பெருமை மிக்க மலை நாட்டவனே' எனத் தோழி தலைவனை விளிப்பதன் வாயிலாகத் தலைவனது மலைநாட்டு வளத்தைக்காண முடிகின்றது.

*"உயர்முகை நறுங்காந்தள் நாள்தோறும் புதிதுஈன*
*அயம்நந்தி அணிபெற அருவிஆர்த்து இழிதரும்*
*பயமலை தலைஇய பாடுசால் விறல் வெற்ப"* (*குறிஞ்சிக்கலி. 53:5-7*)

'தலைவன் பிரிந்து செல்ல இருப்பதைக் கண்ட தலைவிக்குக் குற்றமற்ற ஒளிவீசும் நிலவில் மேகம் பரவுவதுபோல் மாசிலாத் தலைவியின் முகத்தில் பசலை படரத்தொடங்கியது' என்பதைப் பின்வரும் பாலைக் கலிப்பாடல் குறிப்பிடுகின்றது.

"இவட்கே செய்வுறு மண்டிலம் மையாப் பதுபோல்
*மையில் வாள்முகம் பசப்பு ஊரும்மே"* (*பாலைக்கலி 6:7-8*)

**பதிற்றுப்பத்தில் 'மழை'**

பதிற்றுப் பத்தில் மழையைக் குறிக்க மழை, மாரி, பெயல், வானம், தலைதல், தளி, உறை ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பெற்றுள்ளன. மழைபெய்யும் கருமேகத்தைக் குறிப்பதற்கு மழை, எழிலி, கமஞ்சூல், வானம், புயல், கார் ஆகிய சொற்கள் பயின்று வந்திருக்கின்றன.

***எழிலி - மேகம்; மாரி - மழை***

'மண் அணுக்கள் செறிந்த இவ்வுலகத்து உயிர்களை எல்லாம் பாதுகாக்கும் தொழிலை மேற்கொண்ட குளிர்ந்த தன்மையுடைய மேகமானது, அவ்வுயிர்கள் அழிவுமாறு பல ஆண்டுகள்வரை அவற்றை நடுங்கச் செய்து மழைபொழியாது நீங்கிப் பொய்த்தாலும், சேரலாதன் நாம் விரும்பிக் கேட்கும் பொருட்களைப் பின்னும் தருவதில் சிறிதும் தவறமாட்டான்' என மன்னது கொடைச்சிறப்பைக் கூறுகின்றார் புலவர்.

*"மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட*
*தண்ணியல் எழிலி தலையாது மாறி*
*மாரி பொய்க்குவ தாயினும்*
*சேர லாதன் பொய்யலன் நசையே"* *(பதிற்று. 2ம்பத்து, 18:9-12)*

இப்பாடலில் சேரலாதன் கொடைத்தன்மை, மாரியின் வள்ளல் தன்மையோடு ஒப்பிட்டுக் கூறப்பெறுகின்றது.

**மழை, கமஞ்சூல் - மேகம்**

'ஒலிக்கின்ற அலைகளைக் கொண்ட குளிர்ந்த கடலானது மேகங்கள் படிந்து அதன் நீரைக் கொள்ளுதலால் விடாமல் மழைநீரும் ஆற்றுநீரும் தன்னிடத்தே வந்து கலத்தலால் நிறைந்து கரையைக் கடக்காது' என்பதைப் பின்வரும் பதிற்றுப் பத்துப் பாடலடிகள் கூறுகின்றன.

*"மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது*
*விலங்குவளி கடவும் துளங்கிருங் கமஞ்சூல்*
*வயங்குமணி இமைப்பின் வேலிடுபு*
*முழங்குதிரைப் பனிக்கடல்"* *பதிற்று, ஐந்தாம் பத்து, 45:19-22*

**வெண்மழை - வெண்மேகம்**

'நினது வாழ்நாள், வேண்டிய கால அளவினுள் பல ஆண்டுகள் கழிந்துவிட்டமையால், மழை பெய்து உலகத்து உயிர்களைப் பாதுகாத்து, பிறகு அடித்த பஞ்சினைப் போன்று பொங்கியெழுந்து மலையினை அடைந்த வெண்மேகம் போலச் சென்று ஒழியாதாகுக" எனப் புலவர் மன்னனை வாழ்த்துகின்றார்.

*"வேண்டுவ அளவையுள் யாண்டுபல கழியப்*
*பெய்துபுறந் தந்து பொங்க லாடி*
*விண்டுச் சேர்ந்த வெண்மழை போலச்*
*சென்றா லியரோ பெரும"* *பதிற்று, ஆறாம்பத்து, 55: 13-16*

***நாள்மழை பருவகாலத்து மேகம்***

'பருவகால மேகக் கூட்டங்கள் தங்கியுள்ள மலைச்சிகரத்தை ஒக்கும் தோற்றத்தினைக் கொண்ட கேடகங்களுக்கு மேலெழுந்து தோன்றும் ஒளிபரந்து

விளங்கும் வேல்களைக் கொண்டவர்கள் வாழியாதனின் வீரர்கள்' என்கின்றார் கபிலர்.

*"நாள்மழைக் குழூஉச்சிமை கடுக்கும் தோன்றல்*
*தோல்மிசைந்து எழுதரும் விரிந்திலங்கு எஃகின்"*

பதிற்று. ஏழாம்பத்து, 66:11-12

**கார்மழை - கார்காலத்து மேகம்**

'குறுந்தடிகளை எடுத்து அடிக்கப்பெற்ற வெற்றி முரசுகள் கார்காலத்து மேகத்தினைப் போன்று மிகுதியாக ஒலித்தன' என அரிசில்கிழார் பாடியுள்ளார்.

*"எடுத்தெறிந்த விறல்முரசம்*
*கார்மழையின் கடிது முழங்க"* பதிற்று, எட்டாம் பத்து, 80:3-4

இவ்வாறு பதிற்றுப்பத்துப் பாடல்களை நோக்கும்போது பெரும்பாலான பாடல்களில் 'மழை' என்னும் சொல் மேகத்தைக் குறித்து வருகின்றது. பிற நூல்களில் குறிப்பிடப்பெறாத நிலையில் 'கமஞ்சூல்' என்னும் சொல்லும் மேகத்தையே குறித்து வருகின்றது.

**முல்லைப்பாட்டில் 'மழை'**

முல்லைப் பாட்டில் மழையைக் குறிக்கப் பெயல், வானம், வெண்மழை ஆகிய சொற்கள் பயின்று வந்துள்ளன. மேகத்தைக் குறிக்க எழிலி என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒலிமுழங்குகின்ற குளிர்ச்சியையுடைய கடல்நீரைக் குடித்து வலமாக எழுந்து மலைகளை இருப்பிடமாகக் கொண்ட மேகம், பெய்யும் காலத்தில் மிகுதியாகப் பயணிக்கும். அப்படிப் பெரிய மழையைப் பெய்த சிறு பொழுதாகிய மாலைக்காலம் வருத்தம் செய்கிறது.

*"பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு*
*கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல எழிலி*
*பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை" (முல்லைப். 4-6)*

இதில் பெயல் என்னும் சொல் மழையையும், எழிலி என்னும் சொல் மேகத்தையும் குறிக்கும்.

'மழை வேண்டியபொழுது பெய்தமையால் வரகு நன்கு விளைந்தது. எதிர்காலத்துக்குப் பெய்யச் செல்கின்ற வெள்ளியமழை சிறு துவலையைப் பொழியும். முன்பனி தொடங்கும் திங்களில் வளைந்த கதிரையுடைய வரகிடத்தே முறுக்குண்ட கொம்பினையுடைய கலைமானுடன் மடப்பத்தையுடைய பெண்மான் துள்ளியது' எனக் கார்ப்பருவத்துச் செயற்பாடுகள்,

*"வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்*
*றிரிமருப் பிரலையொடு மடமா னுகள*
*எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்கள்" (முல்லைப். 98-100)*

என்னும் பாடலடிகளில் கூறப்பெற்றுள்ளன. இப்பாடலடிகளில் 'வானம்' என்னும் சொல் மழையையும், 'வெண்மழை' என்னும் சொல் சிறு துவலையாகப் பெய்யும் மழையையும் குறிக்கும்.

**பெரும்பாணாற்றுப்படையில் 'மழை'**

பெரும்பாணாற்றுப்படையில் மழையைக் குறிக்க மழை, துளி ஆகிய சொற்களும், மழைக்கு மூலகாரணமாகிய மேகத்தைக் குறிக்க 'மழை' என்னும் சொல்லும், குளிர்ந்த கண்களுக்கு 'மழைக்கண்' என்னும் சொற்றொடரும் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

"மழைவிளை யாடுங் கழைவளர் அடுக்கம்" (பெரும்பாண்.257)

என்னும் பாடலடி மேகங்கள் விளையாடித் திரியும் மூங்கில் வளர்கின்ற மலைப்பக்கம் என்னும் பொருளைத் தருகின்றது. இவ்வடியில் 'மழை' என்னும் சொல் மேகத்தைக் குறிக்கின்றது.

மழைக்காலத்தில் மேகம் விசும்பிடத்தே பரந்து காணப்படும். சிற்றூர்களில் வரகு வைக்கோலால் வேய்ந்த அழகிய குடியிருப்புகள் காணப்படும்.

*"பருவ வானத்துப் பாமழை கடுப்பக்*
*கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்"* (பெரும்பாண். 190-191)

இதில் 'பருவம்' என்னும் சொல் மழைக்காலத்தையும், 'பாமழை' என்னும் சொற்றொடர் மேகத்தையும் குறிக்கும்.

'அந்திக் காலத்தில் சிவந்த வானத்தில் காணப்படும் கருமேகத்தைப் போன்று வெள்ளிய கொம்புடைய கரிய யானைப் பிணத்தைக் குருதியாறு இழுத்துக் கொண்டு சென்றது.'

*"அந்தி வானத்து ஆடுமழை கடுப்ப*
*வெண்கோட்டு இரும்பிணம் குருதி ஈர்ப்ப"* (பெரும்பாண். 413-414)

இதிலும் 'மழை' என்னும் சொல் மேகத்தையே குறிக்கின்றது.

**சிலப்பதிகாரத்தில் 'மழை'**

இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் வான்மழையைப் பலவாறு சிறப்பித்துப் போற்றியுள்ளார்.

*"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்*
*நாமநீர் வேலி உலகிற்கு அவனளிபோல்*
*மேல்நின்று தான்சுரத்த லான்"* (மங்கல வாழ்த்து, 79)

'அச்சம்தரும் கடலால் சூழப்பட்ட இந்த உலகத்திற்குச் சோழமன்னனின் செங்கோலாட்சியின் அருளினைப்போல மேலிருந்து நீரைப் பொழிந்து வளத்தைப் பெருக்குதலால் அச்சிறந்த வான்மழையைப் போற்றுவோம்' என இளங்கோவடிகள் இப்பாடலடிகளில் குறித்துள்ளார்.

*"அலைநீர் ஆடை மலைமுலை ஆகத்து*
*ஆரப்பே ரியாற்று மாரிக் கூந்தல்*
*கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை"*

*(இந்திரவிழா ஊரெடுத்த காதை, 13)*

'இடமகன்ற பரப்பைக் கொண்ட மண்மகள், கடலை ஆடையாகவும் மலையை முலையாகவும், அம்மலையில் பாயும் ஆறுகளை மார்பில் அணியும் முத்துச்சரங்களாகவும், கருக்கொண்ட மழைமேகத்தைக் கருங்கூந்தலாகவும் கொண்டவள்' என்னும் பொருளில் அமைந்துள்ள இப்பாடலடிகளில் வரும் 'மாரி' என்னும் சொல்லாட்சி மழைபொழியவல்ல கருமேகத்தைக் குறிக்கின்றது.

சோழநாட்டில் இந்திரவிழாவிற்குப்பின்னர் கோவலன் மாதவியுடன் காவிரிப்பூம்பட்டிணத்தை அடைந்து சித்திரகூடத்தில் தங்குகின்றான். மாதவி, யாழில் இனிய இசையை எழுப்பிப் பின் அதைக் கோவலனிடம் தருகின்றாள். மாதவியோ நெடிய கண்ணாகிய வலையினால் கோவலனின் உயிரைக் கொல்கின்றாள். அவள் முத்துவடத்தைத் தாங்கியுள்ள முலைகளின் பாரத்தினால் **மழைபொழியும் மேகத்தில் தோன்றும் மின்னல்போல் மெலிந்து தளர்கின்றது அவள் இடை.** அந்த இடையை அவள் இழந்துவிடக் கூடாது என்கின்றான் கோவலன்.

*"கொடுங்கண் வலையால் உயிர்கொல்வான் நுந்தை*
*நெடுங்கண் வலையால் உயிர்கொல்வை மன்நீயும்*
*வடங்கொள் முலையால் மழைமின்னுப் போல*
*நுடங்கு உகுமென் நுசுப்பிழவல் கண்டாய்"* *(கானல்வரி, பா.எண்.18)*

இப்பாடலில் 'மழை' என்னும் சொல் மழைமேகத்தைக் குறிக்கின்றது.

*"முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்*
*தொடிவிளங்கு தடக்கைச் சோழர்குலத்து உதித்தோர்*
. . . . .       . . . . .       . . . . .
*குடியும் கூழின் நெருக்கமும் அவர்தம்*
*தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும்*
*பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலும்"*

*(புகார்க் காண்டம், கட்டுரை, 19)*

சோழர் குலத்தில் தோன்றிய அரசர்கள் அறம் வீரம் ஆற்றல் மிக்கவர்களாக இருந்தனர். அவர்களின் புகார் நகரத்தில் நடைபெறும் மிகுதியான விழாக்களினால் அந்நகர் விண்ணவர் வரவினைக் கொண்டிருந்தது. சோழநாட்டுக் குடிமக்கள் இன்பத்தில் குறையாமல் வாழ்ந்தனர். அந்நாட்டில் பொய்த்தல் இல்லாமல் மழைபெய்தலால் ஆற்றுவளம் பெருக்கோடியதால் உணவுப்பொருட்களின் வளம் பெருகிறது. இங்கு 'வானம்' என்னும் சொல் மழை

வளத்தைக் குறிக்கின்றது.

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகியோர் உறையூரில் தங்கியிருந்த போது, பாண்டிய மன்னன் இந்திரன் தலையில் சூடிய முடியிலிருந்த கிம்புரியை உடைத்தவன் எனக் கருதி சில ஆண்டுகள் பாண்டிய நாட்டில் இடியுடன் கூடிய மழை பெய்யவில்லை. ஆயினும் தன் நாட்டின் விளைவைப் பெருக்க பாண்டிய மன்னன் மேகங்களைச் சிறைப்பிடித்து தன்நாட்டில் மழை பொழியச் செய்தான். அப்பாண்டிய மன்னனின் புகழை முதிய மறையவன் பாராட்டிப் புகழ்ந்து கொண்டிருந்தான்.

*"முடிவளை உடைத்தோன் முதல்வன் சென்னியென்று*
*இடியுடைப் பெருமழை எய்தா தேகப்*
*பிழையா விளையுள் பெருவளஞ் சுரப்ப*
*மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்கெனத்*
*தீதுதீர் சிறப்பின் தென்னவன் வாழ்த்தி"* ***(காடுகாண் காதை, 2630)***

பெருமழை மழை பெய்தல்; மழை மேகம். கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாகக் கொடுக்கும் கவுந்தியடிகள், 'தம் கணவர்க்கு இனிய துணையாக விளங்கும் மகளிர்க்கு இன்றியமையாததாகிய கற்பாகிய கடமையைக் கொண்ட இத்தெய்வமே அல்லாது வேறு பொலிவுடைய தெய்வம் ஒன்றினை யாம் காணலாம்; பருவ மழை தவறாது; நிலவளமும் குன்றாது; மன்னவனின் வெற்றியும் சிதையாது; கற்புடைய மகளிர் வாழும் நாட்டில்' எனக் கண்ணகியின் பெருமைகளைக் கூறுகின்றார்.

*"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது*
*நீணில வேந்தர் கொற்றம் சிதையாது*
*பத்தினிப் பெண்டிர் இருந்தநாடு என்னும்*
*அத்தகு நல்லுரை அறியா யோநீ"* ***(அடைக்கலக் காதை, 145-148)***

சேரன் செங்குட்டுவன் தண்டமிழாசான் சீத்தலைச் சாத்தனாரிடம் மழை பெய்யாது பொய்க்குமாயின் அரசனுக்கு மிகுந்த பயம்; ஏதேனும் ஒரு காரணத்தால் உயிர்கள் துன்புற்றால் அது அதனினும் பேரச்சம்; குடிகளை அறத்துடன் காத்தும், கொடுங்கோன்மைக்குப் பயந்தும் வாழும் மன்னர் குடியில் பிறத்தல் துன்பம் தருவதேயல்லாது போற்றத்தக்கதன்று எனக் கூறுகின்றான்.

*"மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்*
*பிழையுயிர் எய்திற் பெரும்பேர் அச்சம்*
*குடிபுரவு உண்டும் கொடுங்கோ லஞ்சி*
*மண்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்*
*துன்ப மல்லது தொழுதக வில்லென"* ***(காட்சிக்காதை, 100 - 104)***

இங்கு மழைவளத்தை மழை என்னும் சொல்லாட்சி குறிக்கின்றது.

**மணிமேகலையில் 'மழை'**

அக்காலத்தில் முரசறைந்து செய்தியை அறிவிக்கும் வள்ளுவன் பூம்புகாரில் நடைபெறவிருக்கும் இந்திர விழாவினை அறிவிக்கும்போது பூம்புகார் நகரத்தையும் மழையையும் மன்னனது செங்கோலையும் முதலில் வாழ்த்திப் பின்னர் செய்தியைக் கூறுகின்றான்.

*"திருவிழை மூதூர் வாழ்கஎன் றேத்தி*
*வான மும்மாரி பொலிக மன்னவன்*
*கோள்நிலை திரியாக் கோலோ னாக"* (மணிமே. 1:32-34)

இப்பாடலடிகளில் மூன்று செய்திகள் இடம்பெறுகின்றன.

1. திருமகள் எப்போதும் விரும்பி இருத்தலுக்குக் காரணமான பூம்புகார் நகரம் நீடூழி வாழ்க.
2. வானம் மாதந்தோறும் மும்முறை மழைபொழிவதாக
3. கோள்நிலை திரியாமல் நன்னெறியில் இயங்குவதற்குக் காரணமான மன்னன் செங்கோண்மையுடன் இருத்தல். முரசறையும் வள்ளுவன் தொடக்கத்தில் வாழ்த்தியதைப் போல நாடு, மன்னன், மக்கள் ஆகியோரை வாழ்த்துதல் மரபு. செய்தி அறிவிப்பின் இறுதியில், 'மக்கள் பசிப்பிணியும் உடற்பிணியும் தம்முள் மாறுபட்டுப் பகைக்கின்ற பகைமையும் நீங்கி, நாட்டில் எங்கும் நல்ல மழையும் நெல்முதலான பொருள்வளமும் மிகுவனவாக' என்று வாழ்த்துரை,

*"பசியும் பிணியும் பகையும் நீங்கி*
*வசியும் வளனும் சுரக்கஎன வாழ்த்தி"* (மணிமே. 1:70-71)

காணமுடிகின்றது. இங்கு 'வசி' என்னும் சொல் மழையைக் குறிப்பிடுகின்றது.

*"மாசறு விசும்பு"* (மணிமே.6:5)

எனச் சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதையில் வரும் தொடரில் 'மாசு' என்பது முகிலோ மழையோ இல்லாத தெளிவுடைய குற்றமற்ற வானத்தைக் குறிக்கின்றது.

துயிலெழுப்பிய காதையில் மணிமேகலா தெய்வம் உதயகுமாரனை விளித்து, 'மன்னன் தன் குறிக்கோளாகக் கொள்ள வேண்டிய செங்கோன்மையில் தவறினால் வெள்ளி முதலிய கோள்களின் நிலையும் மாறுபடும். இவ்வாறு கோள்நிலை திரிந்தால் மழைபெய்யாமல் உலகில் கடுமையான பஞ்சம் ஏற்படும். மழையின்றிப் பஞ்சம் ஏற்பட்டால் உயிர்கள் இல்லாமல் போகும்' என்று அவனுக்கு அறிவுறுத்துகின்றது.

*"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்*
*கோள்நிலை திரிந்திடின் மாவெறம் கூரும்*
*மாரிவறம் கூரின் மன்னுயிர் இல்லை"* (மணிமே. 7:8-10)

**திருக்குறளில் 'மழை'**

திருக்குறளில் பாயிரப் பகுதியில் கடவுள் வாழ்த்துக்கு அடுத்து இரண்டாம் அதிகாரமாக 'வான் சிறப்பு' என்னும் அதிகாரம் இடம்பெற்றுள்ளது. உலகிற்கு நீர் மிகவும் இன்றியமையாதது. அந்நீரினை நாம் மழையினால் பெறுகின்றோம். கோள்களின் செயற்பாட்டாலும், இயற்கைச் சூழல் காரணமாகவும், பருவ காலந்தோறும் பொய்யாது பெய்ய வேண்டிய மழை சில சமயம் பொய்த்து விடுகின்றது. சில இடங்களில் மிகுதியாகப் பெய்து பேரழிவுகளை ஏற்படுத்துகின்றது. ஆயினும் உலக உயிர்களுக்கு 'வான்மழை' மிகவும் அவசியம். மழையின் இயல்பை திருக்குறள்,

*"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை"* (குறள். 15)

என்கின்றது.

மழை பெய்தலால் உலகம் வாழ்ந்து கொண்டிருப்பதால், உலகத்தில் வாழும் உயிர்களுக்கு மழை 'அமிழ்தம்' ஆகும்.

*"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்*
*தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"* (குறள். 11)

நீரில்லாமல் உலக வாழ்க்கை இல்லை; மழையில்லையெனில் ஒழுக்கமும் இல்லாமல் போகும். அனைவரிடமும் ஒழுக்கம் நிலைத்திருந்தால் தான் உலக உயிர்களுக்கு இன்றியமையாத மழையும் பொய்த்தலின்றிப் பொழியும்.

*"நீரின்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்*
*வான்இன்று அமையாது ஒழுக்கு"* (குறள்.20)

மழை பொய்த்துவிட்டால் இவ்வுலகில் மக்களால் செய்யப்படும் திருவிழாக்களும் நாள் வழிபாடும் நடைபெறா; பிறர் பொருட்டுச் செய்யும் தானமும் தம்பொருட்டுச் செய்யும் தவமும் நின்றுவிடும்.

*"தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்*
*வானம் வழங்கா தெனின்"* (குறள். 19)

மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால் உழவரும் ஏர்கொண்டு உழமாட்டார்கள்.

*"ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்"* (குறள். 14)

பொய்யாமல் வாழ்க்கையைக் கெடுப்பதும் மழையே; அவ்வாறு கெட்டவர்க்குத் துணையாகப் பெய்து முன்போன்று அவர்களைக் காக்க வல்லதும் மழையே. உண்பவர்க்கு நல்ல உணவுப் பொருட்களை விளைவித்துத் தருவதுடன், உண்பவர்க்குப் பருகும் நீராகத் தானும் ஓர் உணவுப் பொருளாகவும் இருப்பதும் மழையே.

*"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூஉம் மழை"* (குறள். 12)

கடலால் சூழப்பட்ட உலகில் மேகத்திலிருந்து மழை பெய்ய வேண்டிய காலத்தில் பொய்த்துப்போனால், பசி உள்ளே நிலைத்து நின்று உலக உயிர்களைத் துன்புறுத்தும்.

*"விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து*
*உள்நின்று உடற்றும் பசி"* (குறள். 13)

மேகம் கடலிலிருந்து நீரைமுகந்து அதனிடத்திலேயே பெய்யாமல் பொய்த்து விடுமானால், பெரிய கடலும்கூட தன் வளத்தில் குன்றி விடும்.

*"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி*
*தான்நல்கா தாகி விடின்"* (குறள். 17)

'வாழ்க்கைத் துணைநலம்' என்னும் அதிகாரத்தில் துணைவியின் சிறப்பைக் கூறவந்த வள்ளுவர், வேறு தெய்வத்தைத் தொழாமல் கணவனையே தெய்வமாகக் கொண்டு தொழுது துயில் எழுகின்றவள் 'பெய்' என்றால் மழை பெய்யும் என்கின்றார்.

*"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை"* (குறள். 55)

ஈகைப் பண்புடைய செல்வரின் வறுமை சிறிது காலத்தில் நீங்கி விடும் என்பதற்கு வள்ளுவர் மழைமேகத்தை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

*"சீருடைச் செல்வம் சிறுதுனி மாசி*
*வறம்கூர்ந் தனையது உடைத்து"* (குறள்.1010)

உழவுத்தொழிலின் மேன்மையை வள்ளுவர் 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' எனப் போற்றியுள்ளார். தொழில்களுள் தலையாய உழவுத்தொழிலும் வான்தரும் மழை வளத்தைப் பொறுத்தே அமையும். மழை இல்லையானால் உயிர்கள் இல்லை. உயிர்களுக்கு அழிவு ஏற்படாமல் உயிரினம் தழைத்துச் செழிப்பதற்கு மழையே காரணமாதலால் திருவள்ளுவர் மழையை 'அமிழ்தம்' என்றார். மரணத்தை விளைவிக்காத ஒன்றே 'அமிழ்தம்' ஆகும். உலகின் அனைத்து உயிரினங்களும் மழையை எதிர்நோக்கியே வாழ்கின்றன. இதனால்தான் திருவள்ளுவர் நூலின் தொடக்கத்திலேயே கடவுள் வாழ்த்திற்குப் பின்னர் மழையைப் போற்றும்விதமாக 'வான்சிறப்பு' என்னும் அதிகாரத்தை வைத்துள்ளார்.

**நீர்ச்சுழற்சி (Hydrological Cycle)**

'தண்ணீர்ச் சுழற்சி' என்பது இயற்கையாக நிகழக்கூடிய ஒன்றாகும். ஆயினும் இந்நீர்ச் சுழற்சி நிகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும். நீரானது

திடப்பொருளாகவும், திரவப் பொருளாகவும், ஆவியாகவும் மாற்றம் பெற்று ஒரு சுழற்சியாக நடைபெற்றுக் கொண்டிருப்பதே நீர்ச்சுழற்சியாகும். நீர் ஆவியாக மாறுவது மிகமிக இன்றியமையாததாகும். இல்லையெனில் பூமி ஒரு வெற்றுக்கிரகமாக மாறிவிடும்.

**நீராவியும் பசுங்குடில் விளைவும்** (Green House Effect)

சூரியன் ஒளியைத் தருவதோடு வெப்பத்தையும் உமிழ்கின்றான். சூரியனிலிருந்து பல்வேறு வெப்ப ஆற்றல் வெளிப்படுகின்றது. அகச் சிவப்புக் கதிர்கள் (Infra Red Rays), புற ஊதாக் கதிர்கள் (Ultra Violet Rays), காமா கதிர்கள் (Gama Rays), எக்ஸ் கதிர்கள் (X Rays) ஆகியனவற்றோடு ஒளிக்கதிர்களையும் சூரியன் வெளியிடுகின்றது. சூரியனின் இந்த வெப்பக்கதிர்கள் வாயுமண்டலத்துள் (வளிமண்டலம்) நுழையும்போது ஏறக்குறைய 25% வெப்பக் கதிர்கள் மீண்டும் விண்வெளிக்கே திருப்பி யனுப்பப்படுகின்றன. பூமியின் மேற்பரப்பிலுள்ள மேகங்களும் வளிமண்டலத் துகள்களுமே (Atomesphenic particles) இதற்குக் காரணமாகும். ஏறக்குறைய 20% வளிமண்டலத்தால் ஈர்க்கப்படுவதால் எக்ஸ், காமா கதிர்களும் புறஊதாக் கதிர்களும் பூமியின் தரையைத் தொடுவதில்லை. பூமியின் பல்வேறு வளிமண்டல அடுக்குகளைத் தாண்டியும் ஊடுருவியும் 50% வெப்பம் மட்டுமே பூமியின் தரையைத் தொடுகின்றது. அந்த வெப்பத்தின் 85% மரம், செடி, கொடி, மண், கடல் ஆகியனவற்றால் ஈர்க்கப்படுகின்றன. எஞ்சிய 15% வெப்ப ஆற்றல் வளிமண்டலத்திற்கே திருப்பி அனுப்பப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**மழைநீரைச் சேகரிப்பது மன்னர் கடமை**

புறநானூற்றுப் புலவர் குடபுலவியனார், பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு மழைபெய்யும்போதே மழைநீரைச் சேமித்துவைக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார். அப்படிச் செய்வதே ஆட்சியாளரின் கடமையாகும். அத்தகைய மன்னனையே மக்கள் நல்லரசனாகப் போற்றுவர்.

*“நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே*
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்*
*உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே*
*நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசி னோரே*
*வித்தி வான்நோக்கும் புன்புலம் கண்அகன்*
*வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்*
*இறைவன் தாட்கு உதவாதே அதனால்*
*அடுபோர்ச் செழிய இகழாது வல்லே*

*நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்*
*தட்டோர் அம்ம இவண்தட் டோரே*
*தள்ளாதோர் இவண் தள்ளா தோரே'* (புறம். 18: 12-30)

இப்பாடலைப் பாடிய குடபுலவியனார் ஒரு வேளாண் சிந்தனையாளராக விளங்குகின்றார். சமுதாயத்தின் அடுத்த தலைமுறையினர்க்குப் பயனளிக்கும் திட்டங்கள் அரசன் செயற்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார். வான்மழை பெய்யும்போதே அதன் நீரைச் சேமிக்க வேண்டும். இல்லையேல் பின்னர் துன்புற நேரிடம். உணவை உருவாக்கியும் தானே உணவாகவும் அமையும் மழைநீரைச் சேகரித்துப் பாதகாத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**முடிவுரை**

- முல்லை நிலத்தின் கருப்பொருள்களுள் ஒன்றாகக் கூறப்பட்ட 'மழை' சங்க இலக்கியத்தில் ஐந்திணைப் பாடல்களிலும் பதிவாகி உள்ளன.
- பருவமழை பொய்த்தலுக்குரிய சமூகக் காரணங்களும் அரசியல் காரணங்களும் அறிவியல் நிகழ்வுகளும் சங்கப் பாடல்களில் விளக்கப் பெற்றுள்ளன.
- வேளாண்மையை அடிப்படைத் தொழிலாகக் கொண்ட சங்ககாலச் சமுதாயத்தில் வான்மழையின் அவசியம் பரவலாக வலியுறுத்திக் கூறப்பெற்றுள்ளன.
- நீர்வளம் குன்றின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்ற உண்மை குறிப்பாக உணர்த்தப் பெற்றுள்ளன.

# தமிழர் பண்பாட்டில் புழங்குபொருட்கள்

முனைவர் பா.நேருஜி

**சென்ற இதழின் தொடர்ச்சி**

**ஆடைகள், அணிகலன்கள்**

மனித நாகரிகத்தில் ஆடை, அணிகலன்கள் பிரிக்க முடியாத கூறுகளாக விளங்குகின்றன. காலம், வயது, பால், இடம், சூழல் ஆகியவற்றிற்கு ஏற்ப ஆடை அணிகலன்கள் மாறுபட்டும் வேறுபட்டும் காணப்படுகின்றன. ஆடை, அணிகலன்கள் மக்களின் பொருளாதார நிலைக்கு ஏற்ப மாறுபட்டுத் திகழ்கின்றன. பொதுவாக ஆடை, அணிகலன்கள் அவற்றைப் பயன்படுத்தும் மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் காரணியாக விளங்குகின்றன.

**ஆடைகள்**

பழங்காலத்தில் மனிதன் தழை ஆடை, தோலாடை, மரவுரியாடை போன்றவற்றை உடுத்திவந்தான். நெசவுத் தொழில்நுட்பம் அறிந்த நிலையில் பருத்தி ஆடை, பட்டாடை போன்றவற்றைத் தயார் செய்து பயன்படுத்தினான். பருத்திப் பஞ்சினை நூலாக நூற்று, ஆடையாக நெய்து அணியத் தொடங்கிய காலகட்டத்தை மனித வரலாற்றின் திருப்பம் என்று கூறலாம். ஆடை பற்றிய குறிப்புகள் தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் "ஊழணி தைவரல் உடை பெயர்த்துடுத்தலோடு"[11] என்று இடம்பெற்றுள்ளது. ஆடையானது தட்பவெப்ப நிலையிலிருந்து பாதுகாத்தல், மான உணர்வு, அழகு கூட்டுதல், தன் தகுதி உணர்த்தல், கலை உணர்வைக் காட்டுதல் போன்ற காரணங்களுக்காக மனிதனால் அணியப்பட்டு வருகிறது.

பருத்தி ஆடைகள் நெசவுத்தறி, இராட்டை சுற்றுதல் மூலம் உருவாக்கப்படுகின்றன. "சங்க காலத்தில் முதிர்ந்து வெடித்த பருத்திக் காயிலிருந்து கிடைக்கும் பஞ்சை வில்லால் அடித்துச் சுத்தம் செய்பவரைக் கம்மியர்"[12] என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. "பட்டாடைகள் நூலாக்கலிங்கம் என்றும் பூவேலைப்பாடுகள் மிகுந்த ஆடைகள் பூங்கலிங்கம்"[13] என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆடைகளைத் தைப்போர் "துன்ன வினைஞர், தையல்காரர்"[14] எனப்பட்டனர். சாயம் ஏற்றுதல் மூலம் பல வண்ணத்தில் ஆடைகள் உருவாக்கப்பட்டன. ஆடைகளுக்கு நிறமூட்டச் செடிகளின் தழைகள், மரப்பட்டைகள், அவுரிச் செடிகள் பயன்படுத்தப்பட்டன. இன்று ஆடைகளுக்கு நிறமூட்ட வேதிப் பொருட்களால் தயாரிக்கப்படும் கலவைகள் பயன்படுத்தப் படுகின்றன.

சங்க இலக்கியத்தில் ஆடையானது "உடை, தழை, துகில், கலிங்கம், அறுவை, ஆடை, உடுக்கை, கச்சு, ஈரணி, தானை, போர்வை, காழகம், கச்சை, வம்பு, மடி, பட்டு, சீரை, படம், படாம், பூங்கரை நீலம், உத்தரியம், கம்பலம், கவசம், சூசு, மடிவை, சிதர்வை, சிதவல், வார், மெய்ப்பை, மெய்ம்மறை, மெய்யாப்பு, வெளி, புட்டகம், நூல், பக்குடுக்கை, கூறை, புடவை"[15] எனப் பல பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆடைகள் நாகரிக வளர்ச்சிக்கேற்ப மாற்றமடைந்து வந்துள்ளன. வழிபாட்டின் பொழுது தெய்வங்களுக்குப் பட்டாடைகள் அணிவிக்கப்படுகின்றன. உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்ற நக்கீரரின் வாக்குப்படி தமிழரின் ஆடையாகப் பருத்தி நூலாலான வேட்டி, துண்டு, புடவை போன்றவை இருந்து வருகின்றன. ஆடைகள் ஆண்களுக்குரியவை, பெண்களுக்குரியவை எனப் பிரித்தறியப்படுகின்றன.

**அணிகலன்கள்**

அணிகலன்கள் மானிடரின் அழகுணர்ச்சியின் வெளிப்பாடாக உருவெடுத்த அலங்காரப் பொருட்களாகும். அக்காலத்தில் மலர், காய், கனி, கொட்டைகள், மண் உருண்டைகள் குருத்தோலை போன்றவையும் பின்னர் முத்து, சங்கு, பவளம், தங்கம், வெள்ளி போன்றவற்றாலான அணிகலன்களும் அணியப்பட்டன. அணிகலன்கள் தமிழ் மக்களுடைய அழகுணர்ச்சியையும் தொழில் நுட்பத்தையும் செல்வ நிலையையும் சமுதாயப் பழக்க வழக்கங்களையும் எடுத்துக் காட்டுவதாக விளங்குகின்றன. தமிழரின் அணிகலன்கள் தலையணி, கழுத்தணி, மூக்கணி, காதணி, கையணி, கைவிரலணி, இடையணி, துடையணி, பாத அணி, கால் விரலணி எனப் பத்து வகைகளாகப் பிரித்தறியப்படுகின்றன. மேலும் இவை பயன்பாட்டு அளவில் பண்டைக்கால, இடைக்கால, பிற்கால அணிகலன்கள் எனப் பல படிநிலைகளில் அறியப்படுகின்றன. பொதுவாக உடலில் அணியப்படும் அணிகலன்கள் பழங்காலத்திலிருந்து இன்றுவரை செல்வாக்குடன் திகழ்கின்றன.

அணிகலன்கள் ஆண் குழந்தைகளுக்குரியவை, ஆண்களுக்குரியவை, பெண் குழந்தைகளுக்குரியவை, பெண்களுக்குரியவை எனப் பயன்பாட்டு அடிப்படையில் பகுத்தறியப்படுகின்றன. அணிகலன்கள் காலமாற்றத்தால் பல்வேறு மாற்றங்களுடன் காணப்படுகின்றன.

**தொகுப்புரை**

தமிழர் பண்பாட்டில் புழங்குபொருட்கள் மக்களின் தேவைகளுக்கு ஏற்பவும் பொருளாதார நிலைக்கு ஏற்பவும் உருவாக்கப்பட்டன. காலப் பகுப்பிற்கும் பண்பாட்டை அறிவதற்கும் புழங்குபொருட்களின் படிப்படியான வளர்ச்சி நிலையே முக்கியக் காரணியாகத் திகழ்ந்து வருகின்றன.

பொதுவாகச் சடங்கு சார்ந்த பொருட்களின் மீதான மதிப்பானது மக்களின் மனதில் உயர்ந்ததாகவே காணப்படுகிறது. அப்பொருட்களைப் புனிதமாகக் கருதுதல், உடையாமல் பாதுகாத்தல், வழிபடுதல், தீட்டுப் பற்றிய மதிப்பீடுகள் போன்றவை பொருளின் நிலைபேற்றிற்குக் காரணமாக அமைகின்றன. நேர்த்திக் கடன் பொருட்கள் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையவையாக உள்ளன. சடங்கு சார்ந்த புழங்குபொருட்கள் பண்பாட்டோடு தொடர்புடையனவாகவும் மக்களின் தனித்த அடையாளங்களை வெளிப்படுத்துவனவாகவும் உள்ளன.

உலகமயமாக்கல் வலுத்துவரும் நிலையில் மரபான ஆடை, அணிகலன்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றன. புழங்குபொருட்களை உற்பத்தி செய்துவரும் கைவினைஞர்களின் வாழ்வாதாரம் பின்னடைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

தமிழர்களால் உருவாக்கப்பட்ட கைவினைப் புழங்குபொருட்கள் சுற்றுப்புறச் சூழலையும், உயிரினங்களையும் பேணிப்பாதுகாத்து வந்துள்ளன. மரபுத் தொழில் நுட்பத்துடன் சிறப்பாக உற்பத்தி செய்து பயன்படுத்தப்பட்ட புழங்குபொருட்களை மீட்டுருவாக்கம் செய்வதும் புதுப்பிக்க வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. அ. பிச்சை, தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு, ப. 74.
2. சி. கோவிந்தராசனார், தமிழகத்துக் கலைகள், ப. 75.
3. வி.சி.சசிவல்லி, பண்டைத் தமிழர் தொழில்கள், ப. 84.
4. சி. கோவிந்தராசனார், தமிழகத்துக் கலைகள், ப. 33.
5. வி.சி. சசிவல்லி, பண்டைத் தமிழர் தொழில்கள், ப. 112.
6. மேலது, பக். 112-113.
7. மேலது, பக். 114-115.
8. வி.சி. சசிவல்லி, பண்டைத் தமிழர் தொழில்கள், பக். 92-94.
9. வி.சி. சசிவல்லி, பண்டைத்தமிழர் தொழில்கள், ப. 93.
10. மேலது, ப. 96.
11. இளம்பூரணர், தொல்காப்பியம் தெளிவுரை, ப.21.
12. கு. பகவதி, தமிழர் ஆடைகள், ப. 229.
13. ஆ. இராமகிருட்டிணன், தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், பக்.103-104.
14. கு. புகவதி, தமிழர் ஆடைகள், பக். 267.
15. கு. பகவதி, தமிழர் ஆடைகள் பக். 20-21.


| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 2,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

## ஜூன் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



கவிஞர் சுரதா
(ஜூன் 19)



(கோ)விந்தன்
(ஜூன் 30)



புதுமைப்பித்தன்
(ஜூன் 30)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

### ஆசிரியர் குழு

பெரும்புலவர் திரு. **இரா.இளங்குமரன்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **முருகரத்தனம்**
முனைவர் திரு. **இராமசுந்தரம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5508/56 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

| | |
|---|---|
| **முனைவர் சு.விஜயன்**<br>முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி | **இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**<br>செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி |

| | |
|---|---|
| அனுப்புநர்,<br>செயலாளர்<br>மதுரைத் தமிழ்ச் சங்கம்,<br>54, தமிழ்ச் சங்கம் சாலை,<br>மதுரை - 625 001. | From<br>**THE SECRETARY**<br>Madurai Tamilsangam<br>54, Tamil Sangam Road,<br>Madurai - 625 001, TAMILNADU, INDIA |

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **ஜெயஸ்ரீ கிராபிக்ஸ்,** காமராஜர்சாலை, மதுரை-625 009.